1023

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 AUG 1938
MADRAS

422

GOOD MESSAGES TO THE SICK.

சுகவீனருக்கு சுப செய்திகள்.

412

BY

REV. J. A. AMIRTHANAYAGAM.

Good Messages to the Sick.

சுகவீனருக்கு சுப செய்திகள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 AUG 1938
MADRAS

By

Rev. J. A. AMIRTHANAYAGAM.

First Edition

1938

(Copy right reserved.)

விலை **5** அணா.

PRINTED AT
SOLDEN & CO.,
MADRAS, S.E.

429
242

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 AUG 1938
MADRAS

நூன்முகம

மனிதர் சுகஜீவிகளாய் வசிக்கவேண்டும் என்பதே சிருஷ்டி கர்த்தாவின் நோக்கம். சுவிசேஷங்களில் இயேசுரட்சகர் வியாதியஸ்தருடன் பேசிய வார்த்தைகளை ஆராய்ந்துபார்த்தால், இந்த சிறந்த சத்தியம் தெளிவாகத் தெரியவரும். இரட்சகர் குஷ்டரோகியைப் பார்த்து 'எனக்கு சித்தமுண்டு' என்றுதான் சொன்னார்.

ஆகவே, வியாதியால் சங்கடப்படுபவர் யேசுநாதர் பிணிகளை நீங்கச்செய்த சரித்திர விபரங்களை வாசித்து ஆராய்ந்துபார்த்தல், மிகுந்த நன்மைகளைக் கொண்டுவரும் என்பதற்கு சந்தேகமில்லை. நல்ல சுகமாகத் திரியும்போது சுவிசேஷ சங்கதிகளை அறிய மனமில்லாதவர்கள், வியாதியால் துன்புறும்போது அந்தச் சுவிசேஷ செய்திகளை கண்டறிய அவாவுடையவராவார். இப்படி ஆராய்ந்துபார்ப்பதால் மிகுந்த ஆறுதலையும் தைரியத்தையும் அடைந்துகொள்ள ஏதுவுண்டாகும். ஆதலால், அநேகருடைய வியாதிப் படுக்கையானது அவர்களை பரலோக புஸ்தகத்தில் தேறினவர்களும், ஜெபத்தில் வல்லவர்களும், விசுவாசத்தில் ஜெயம் பெற்றவர்களுமாக்கி விட்டதென நாம் கண்டறியலாம். கடவுளை அதிகமாக அறியும் அறிவும் இதிலே

கிடைக்கும். இவைகளெல்லாம் கிடைப்பதற்கு மெத்த அருமையான காரியங்கள் என்பது நிச்சயம். இனி வியாதியைப்பற்றிய பயமாவது சந்தேகமாவது வேண்டுவதில்லை. ஏனெனில், அது கர்த்தாவின் நடத்துதலுக்கு ஒத்த காரியம் என்றே அறிவோம்.

'சுகவீனருக்கு சுபசெய்திகள்' என்னும் இப்புஸ்தகம் நோயுற்றோருக்கு பிரயோஜனம் தரவென்று எழுதப்பட்டுளது. வியாதியால் படுக்கையிலிருக்க நேரிட்டால், ஏதாமொருவர் இதன் ஏடுகளை தங்களுக்கு வாசித்துக் காட்டுவது நலம் தரவே தரும்.

நீண்ட நாட்களாய் சுகவீனத்திலிருப்பவர் மற்றவர்களின் உதவியைத் தேடுவர். அவர்கள் தங்களுக்காக ஓயாமல் விண்ணப்பஞ்செய்ய வேண்டுமென்று விரும்பாமலிரார். அவர்கள் தங்களைச் சந்திக்க வேண்டுமென்றும் ஆவல்கொள்வர். நல்லதுதான். நமது ஆண்டவர் 'நான் வியாதியாயிருந்தேன், நீங்கள் என்னைப் பார்க்க வந்தீர்கள்' எனக்கூறும் மொழிகளைக் கேட்கவே எவரும் விரும்புவார். ஆகவே, வியாதியஸ்தருக்கு உதவி புரிவது மற்றவர்கள்மேல் விழுந்த கடமையாகும்.

ஆத்தும ஆதாயஞ்செய்ய இது தகுந்த இடம். இரட்சகர் நம்மை இங்கே அழைக்கிறார். ஏன்? இரட்சிப்பின் வேலை அங்கே உண்டு. வியாதி

சமையம் சொல்லப்படும் வார்த்தைகளுக்கு செவி கொடுக்க, துன்பப்பட்ட ஆத்துமாக்கள் ஆயத்த மாக்கப்பட்டவைகளாய் இருக்குமல்லவோ! எவ்வித முரட்டுக் குணமுள்ளவர்களும் அப்பொழுது தாழ்மையுடனே கேட்பதைக் காணலாகும். ஆதலால், வியாதியஸ்தரை சந்திக்க விரும்புவோர் தகுந்த ஆயத்தமுள்ளவர்களாய்ப் போகவேண்டியது மெத்த அவசியமே. சிறிய ஆயத்தம் பெரிய நன்மைகளைக் கொண்டுவர ஏதுவுண்டாக்கும். ஆகவே, வியாதியஸ்தரைச் சந்தித்து அவர்களுக்கு மேலான உதவியைப்புரிய விரும்புவோருக்கும் இப் புஸ்தகம் பயன் படுமென்று நம்புகிறோம்.

திருக்கடவுள் தாமே வியாதியஸ்தரையும் வியாதியஸ்தரைச் சந்திப்போரையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்ற மன்றாட்டுகளுடனே இப்புஸ்தகத்தை வெளிப்படுத்துகின்ற ஊழியன்

நாங்கூர்,
16—7—1938.

J. A. அமிர்தநாயகம் அய்யர்,
S. P. G. Mission.



Rev. J. A. AMIRTHANAYAGAM.

பொருளடக்கம்.

அதிகாரங்கள்.

			பக்கம்.
1.	இன்னும் நம்பிக்கை உண்டு	...	9
2.	சிருஷ்டிகரிடம் போவதே சரி	...	14
3.	வியாதிகளின் கொடூரம்	...	23
4.	கிலேயாத்தின் பிசின்தைலமும், இரண வைத்தியனும்	...	30
5.	பரம வைத்திய மாணுக்கர்	...	50
6.	சுகவீனருக்கு எச்சரிப்பு	...	55
7.	கிறிஸ்து மாறுதவர்	...	60
8.	பாவம்—நோயின் முக்கிய காரணம்	...	66
9.	நோயின் அந்தரங்கம்	...	74
10.	சோதனை—நோயின் மறு காரணம்	...	83
11.	மிகுந்த கனி—நோயின் வேறொரு காரணம்	...	93
12.	சிலுவை—நோயின் மற்றக் காரணம்	...	98
13.	மருந்துப் பிரயோகம்	...	101
14.	பலத்தின் ரகசியம்	...	105

" நான் உபத்திரவப்பட்டது
எனக்கு நல்லது ;
அதினால் உமது பிரமாணங்களைக்
கற்றுக் கொள்ளுகிறேன்."

சங்கீதம். 119 : 71.

சுகவீனருக்கு சுபசெய்திகள்.

OFFICE OF THE REGISTRA
24 AUG 194
MADRA

---

1. அதிகாரம்.

இன்னும் நம்பிக்கை உண்டு.

சிருஷ்டிகர் மனிதனைச் செம்மையானவனாக படைத்தார். சிருஷ்டிப்பின் அலங்காரம் மனிதனில் பூரணமாய் விளங்கினது. மனிதன் இந்நிலமையில் நிலைகொண்டிருந்தால், சரீர நோய்கள் அவனைப் பிடித்துக்கொள்ளவும் மரணம் அவனை ஆண்டுகொள்ளவும் கொஞ்சமும் இடம் இருந்திருக்கமாட்டாது.

மனிதனோவெனில் அநேக உபாய தந்திரங்களைத் தேடி, பாவத்தொழிலைப் புரிந்து, தன்னையே தான் கெடுத்து, சகலவித பிணிகளுக்கும் ஆளாகிவிட்டான். அவன் கதறுதல் நித்தமும் வெள்ளம் போல புரண்டு போகலாயிற்று. பிரேதக்குழியைக் கண்டுபிடித்ததினால் மிகவும் களிகூருகிற ஓர் நிர்பந்தனுமானான். இப்படியிருந்தபோதிலும் இன்னும் நம்பிக்கை உண்டு.

கடவுள் இந்த உலகத்தை சிருஷ்டித்தது மட்டுமல்ல, பாதுகாத்தும் வருகிறார். அவர் சகலத்தையும் புதிதாக்குகிறவர். (வெளி. 21 : 5.) அவர் எந்த ஆபத்திற்கும் தப்பிக்கொள்ள ஒரு புகலிடத்தையும் உண்டாக்குகிறவர். சங்கீதக்காரன் : "அவர் உன் அக்கிர

மங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயதுபோலாகிறது" (சங். 103 : 3-5) என்றும், "நிர்மூடர் தங்கள் பாதகமார்க்கத்தாலும் தங்கள் அக்கிரமங்களாலும் நோய்கொண்டு ஒடுங்கிப் போகிறார்கள். அவர்கள் ஆத்துமா சகல போஜனத்தையும் அரோசிக்கிறது, அவர்கள் மரணவாசல் பரியந்தம் சமீபிக்கிறார்கள், தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள்; அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி ரட்சிக்கிறார். அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார். அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும், மனுப்புத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதித்து, ஸ்தோத்திர பலிகளைச் செலுத்தி, அவருடைய கிரியைகளை ஆனந்த சத்தத்தோடே விவரிப்பார்களாக" (சங். 107 : 17-22) என்றும் சொல்லியிருப்பது வாஸ்தவமே என்று அவரவர் தங்கள் அனுபவத்தில் அறிந்துகொள்ளலாம்.

மனிதன் கடவுளுக்கு எவ்வளவு கொடிய துரோகியாகிவிட்டாலும் இன்னும் நம்பிக்கை உண்டு. வியாதி துன்பம் எவ்வளவு கடுமையாகிவிட்டாலும் நம்பிக்கை உண்டு. இழந்துபோன பரதீசு திரும்பக்

கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் திரும்பக் கிடைக்கும் முறைகள் வேறே. எப்படியெனில், "மெய்யாகவே அவர் (கிறிஸ்து) நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்" (ஏசா. 53 : 4). தேவகுமாரன் மனிதனாய்த் தோன்றி, திவ்ய நீதியினால் மனுஷருக்கு வரவேண்டிய தண்டனையைத் தாமே உத்தரித்தார். அவர் மரித்தும் உயிர்த்தெழுந்து மனிதரோடே வாசஞ் செய்கிறார். மரணத்தின் கூரை ஒடித்துப்போட்டார். பூமியிலுள்ளோரே, எல்லாரும் என்னை நோக்கிப் பாருங்கள் என்று கட்டளையிடுகின்றார். அவரை நோக்கிப் பார்ப்பவன் பிழைக்கவே பிழைப்பான். ஆறு துன்பங்களிலிருந்து அவர் விடுவிப்பார். ஏழிலும் அவர் கைவிடாரே. எழுதியிருக்கிறபடி 'தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண்காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை' (ஏசா. 64 : 4).

ஆகவே, சகல நன்மைகளும் ஏற்படுத்தப்பட்டு ஆயத்தமாயிருந்தபோதிலும், மனிதன் நம்பிக்கையுள்ளவனாய் அவைகளை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவை யாதொரு பிரயோஜனத்தையும் தரமாட்டா. மனிதன் பாவத்தில் விழுந்ததுமுதல், தெய்வத்தின் மேல் வைக்கும் விசுவாசமும் நம்பிக்கையும் அவனிலிருந்து முழுவதுமாய் அற்றுப்போய் விட்டது. இதுவே பாவத்தினாலுண்டாகிய கேடுகளில் முக்கிய

மானது என்று சொல்லலாம். ஆதலால் தேவன்பேரில் நம்பிக்கை வைக்க மனிதன் முதல்முதல் தெய்வத்தினுடைய தன்மையையும் அவரது திவ்ய சித்தத்தையும் அறிந்துகொள்வது அவசியமாகின்றது. மனிதன் தானாய் இவைகளை அறிந்துகொள்ள முடியாது. சூரியனைப் பார்க்கவேண்டுமானால், அதன் வெளிச்சத்தைக்கொண்டே அதைப் பார்க்கவேண்டும். சூரியனில் வெளிச்சம் இல்லாவிடின், மற்ற அற்ப வெளிச்சங்களைக்கொண்டு அதைப் பார்க்க முடியாது. அதுபோல மனிதன் தன்னுடைய அற்ப வெளிச்சமாகிய புத்தியினால் தேவனை அறிந்துகொள்ள முடியாது. ஆதலால் தேவனே தம்மைப் பூரணமாக மனிதருக்கு வெளிப்படுத்தினார். தாம் பூரண இரக்க முடையவராய் இருக்கிறாரென்றும், அவரே இன்னும் மனிதனுடைய பூரண அன்புள்ள பிதாவாயிருக்கிறாரென்றும், கடவுள் தம்மை தமது ஒன்றான குமாரன் மூலமாய் உலகத்திற்கு வெளிப்படுத்தினார். பிதாவின் மடியிலிருக்கிற குமாரனேயன்றி பிதாவைப் பூரணமாய் அறிந்தவன் ஒருவனுமில்லை. மேலும், மனிதன் தன்னுடைய பாவத்தின் சீர்கேட்டினிமித்தம் கலக்கமுடையவனாயிருப்பதால், விசுவாசமும் நம்பிக்கையும் அவனில் தானாய் ஒருபோதும் உண்டாகாது. விழுந்துபோன மனிதனில் விசுவாசத்தைத் துவக்குகிறவரும் கடவுளே. ஆனால் மனிதன் அந்த விசுவாசமாகிய ஈவை ஏற்றுக்கொள்ளப் பிரியம் அல்லது சம்மதமுடையவனாய் இருந்தால்மட்டும், அது அவனுக்குக் கிட்டும்.

இப்படியிருக்க, சாத்தான் எப்போதும் அவிசுவாசத்தைக் கொண்டுவருவான். இதிலே அவனுடைய வேலே அதிகம். அவன் மனிதனே அவநம்பிக்கை என்னும் சேற்றில் விழப்பண்ணி, அவனே அச்சேற்றின் நடுவிலே தள்ளிவிட்டு வேடிக்கை பார்ப்பது சாத்தானுடைய தீய விளேயாட்டாகும். ஆதலால் சாத்தானுக்கு இடங்கொடுக்கலாகாது ; அவனுடைய இதமான வசனங்களால் ஏமாந்து போகலாகாது என்று அறியக்கடவோமாக.

எல்லாவற்றிற்கும் மேலாக, "தேவன் தம்முடைய ஒரே பேருன குமாரனே விசுவாசிக்கிறவன் எவனே அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனே அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." (பரி. யோ. 3: 16). இதைவிட பெரிதான நன்மை என்ன? ஆதலால் 'நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி' கருத்துள்ளவர்களாயிருப்போமாக. "அந்த நம்பிக்கை நமக்கு நிலேயும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது." (எபி. 6 : 18-19). ஆகவே இன்னும் நம்பிக்கை உண்டு என்று அறிகின்ருேம்.

பூவுலகின் மக்களுக்குப்
புது நம்பிக்கை காட்டி,
எவ்வுயிரும் பிழைக்கச்செய்த
இறையவனே சரணம்.

2. அதிகாரம்.

சிருஷ்டிகரிடம் போவதே சரி.

சிருஷ்டிகர் ஏற்படுத்திய இயற்கைப் பிரமாணத்தை மனிதன் மீறினுல், இயற்கையானது அதை மன்னிக்கிறதில்லை. அதனுல் உண்டாகிய கெடுதியை நிவிர்த்தி செய்ய வேருெரு பிரமாணத்தை சில வேளைகளில் கையாடலாமென்ருலும், அதற்குவேண்டிய அறிவைக் கொடுத்து அதை வாய்க்கச்செய்கிறவர் சிருஷ்டிகரே. இன்னும் மனிதனுக்கு வெளிப்படுத்தப்படாத பிரமாணங்களும் அனந்தம் இருக்கக் கூடும். ஆகவே, இயற்கைப் பிரமாணமானது அதனை ஏற்படுத்திய சிருஷ்டிகரிடமே மனிதனை வழிநடத்துகிறதாயிருக்கிறது. வியாதிகளேச் சுகப்படுத்த வைத்திய சாஸ்திரங்களைக் கடவுள் மனிதருக்கு அருளிச்செய்தபோதிலும், அவையெல்லாம் அவரிடமே வழி காட்டுகின்றன. ஆதலால், சிருஷ்டிகரிடம் போவதே சரி.

சரீர சுகமானது சிருஷ்டிகர் அருளிய சொல்லி முடியாத ஈவுகளில் ஒன்று. சுகவீனமானது அவரை நினைக்க ஏவுகிறது. கடின வியாதிகளும், தீராத ரோகங்களும், நூதனமாய்த் தோன்றும் பிணிகளும் அவரையே இன்னும் அதிகமாய் நோக்கும்படி செய்கின்றன. சரீரத்தை உண்டுபண்ணின சர்வ வல்லவருக்கு அதைச் சரிப்படுத்துவதில் சங்கடம் ஒன்று

மேயில்லை. ஆதலால், வியாதியஸ்தருக்கு அவரிடம் போவதேயன்றி வேறே உத்தமவழி யாது?

சிருஷ்டிகரிடம் போகவொட்டாமல் மனிதனைத் தடைசெய்யும் ஏதுக்கள் பலவுள. பாவத்தின்மேல் ஆசையும் அதை விட்டுவிட மனதில்லாதிருப்பதுமே எல்லாவற்றிலும் முக்கியமான தடையாகும். அவரிடத்தில் போவதனாலுண்டாகும் பெரிய நன்மைகளை அறிந்திட்டபோதிலும், பாவத்தின்மேல் கொண்டிருக்கும் ஆசையானது அதிகமாய் மிஞ்சிப்போவதால், அவரிடத்தில் போக விருப்பமில்லையெனக் காணலாம். பாவத்தை விட்டுவிட மனது வராவிட்டாலும், இருக்கிற நிலமையிலேயே அவரிடம் போக மனதைக் கட்டாயம் செய்வதே நன்று. இதனால் கிடைக்கும் லாபமும் சந்தோஷமும் பெற்றபின்பு, பின்னால்தான் விளங்கக்கூடும். மனதைக் கட்டாயம் செய்வது இடுக்கமான பாதையாகும்; என்றாலும் அது சரியான வழி. கேட்டின் வழி விரிவும் விசாலமுமானது; ஆனால் வழி சோரவழி. சிலபேர் அதின் வழியாய்ப் போவார்கள். உலகத்திலே பெரியோரென மதிப்பு பெற்றவர்களும் பணக்காரர்களும் அவ்வழியிலே போகலாம். அன்னோர் யாவரேயாயினும் ஒருபோதும் நமக்கு மாதிரியாகார். தேவன் நன்மையைத் தெரிந்துகொள்ள மனிதனைக் கட்டாயம் செய்கிறதில்லை. நன்மையை அவனுக்கு உணர்த்திக் காட்டுவார். அதைச் செய்வது கடமையென்றும், அதைப் பற்றிக்கொள்வதே வாழ்வு என்றும் காட்டுவார்; ஆனால் கட்டா

யமோ செய்யமாட்டார். ஏனெனில் சுயாதீன சித்தத்தைக் கொடுத்தவர் அவரே. மேலும் தீயவழியில் செல்ல சாத்தான் அவனைக் கட்டாயப்படுத்த அவர் இடங்கொடுக்கிறதுமில்லை. சாத்தான் துன்மார்க்கத்திற்குத் தூண்டி விடுவான்; துணையுஞ் செய்வான்; கட்டாயம் செய்வதற்கோ அவனுக்கு உத்தரவில்லை. சுயாதீன சித்தமானது கடவுள் மனிதனுக்கு அருளிய பெரிய ஈவுகளில் ஒன்றேயாம். ஆகவே, ஜீவனும் மரணமும் அவன் முன்னாலே இருக்கின்றன; எதையும் தெரிந்து கொள்ளலாம். ஜீவனைப் பற்றிக்கொள்வதே சரி.

மனிதன் ஆண்டவரிடம் போகாமலிருப்பதற்கு அறிவீனமும் ஓர் முக்கிய காரணம். தனக்கு அதிகம் தெரியுமென்று எண்ணுவதே அறிவீனத்திற்கு தாய். வியாதிகள் வந்தால் மருந்துகள் இல்லையா, இதற்கெல்லாம் சிருஷ்டிகரிடம் போகவேண்டிய தீராத அவசியமென்ன என்று அறிவீனன் பேசக்கூடும். தகுந்த மருந்துகளையும் திறமையான வைத்தியர்களையும் வாய்க்கச்செய்கிறது யாரென்று நினைக்கிறதில்லையா? சிலபேர் பல ஔஷதங்களையும் ஒன்று மாற்றி ஒன்று உபயோகித்தால் வியாதிகள் தீர்ந்து போகும் என்று நினைப்பார்கள். இதுவும் எப்போதும் சரிப்படாது; சிலவேளை மோசத்திற்குக் கொண்டுவந்துவிடும்; அது சரியான வழியுமல்ல. பொதுவாய் அறிவீனத்திற்குக் காரணமும் பாவமே; மற்றப்படி ஆண்டவரிடம் போவதற்கு என்ன சங்கடமிருக்கிறது?

அறிவீனன் மிகுதியான துன்பங்களைக் காணுமுன், கடவுளைத் தேடிக்கொள்ள அவனுக்கு இடமில்லை. நீ உன்னை மிஞ்சின ஞானி என்று எண்ணுவானேன்? அல்லது பெரிய பேதையாயிருப்பானேன்? காலத்திற்குமுன் சாவானேன்? குருடனைப்போல சுவரைப் பிடித்து, கண்ணில்லாதவனைப்போல தடவவேண்டியதென்ன? "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனுயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" என்று பரி. யாக்கோபு அப்போஸ்தலன் சொல்லுகிறுர். (பரி. யாக். 1 : 5). எல்லா அறிவும் அறிவல்ல; ஏகபரனை அறிவதே அறிவு. உலக அறிவானது பரம அறிவுக்கு ஒரு வழிகாட்டியாயிருக்கிறதே தவிர வேறல்ல. இந்தப் பரம அறிவானது எவருக்கும் எளிதில் கிட்டக்கூடியதும், மறுஉலக ஜீவிபத்திற்கும் செல்லக் கூடியதாயும் இருக்கின்றது.

கவனமின்மையும், அசட்டையும், சோம்பலும் மேற்கூரிய காரணங்களைப்போலவே, கடவுளிடத்தில் போகவொட்டாமல் மனிதரை பின்னிடச் செய்கின்றன. இவைகள் ஆரம்பத்தில் பெருங் குற்றங்களாகக் காணப்படாவிட்டாலும், மேலே கூறப்பட்ட தடைகளானவை கொண்டுவரும் நஷ்டங்களையே, இவைகளும் வருவிக்குமெனக் காண்கலாம். இவ்வித குணங்கள் பிரபஞ்சக் கவலையும், ஐசுவரியத்தின் வஞ்ச

கமும், சிற்றின்ப மயக்கமும், உல்லாச ஆவலும் உண்டாவதிலிருந்து விளையும் கேடுகளே. இவைகளால் வேதவாசிப்பும் ஜெபமும் பின்னுக்கென்று தள்ளி வைக்கப்படும்; கர்த்தரைக் கண்டடையத்தக்க சமையங்கள் இழந்து விடப்படும்; அவிசுவாசமும் அதிகரிக்கும். ஆதலால் இவைகளைப்பற்றி எச்சரிக்கையாயிருத்தல் அவசியமே. வியாதி நீங்க ஆசையுண்டு; ஆண்டவரிடம் போக ஆவலும் இருக்கலாம்; சோம்பல் அதை எட்டச் செய்யுமா? ஆண்டவரிடத்தில் போகிறதாயிருந்தால், எப்படிப் போகவேண்டும், என்னென்ன செய்யவேண்டும், என்று யோசிப்பது தொல்லையாயிருக்கிறதே என்பதுதான் சோம்பேறியின் எண்ணம். இந்த நோய் இப்போது எப்படியாவது தீரட்டும்; இன்னொர் தடவை வந்தால் பார்த்துக் கொள்ளலாம், அல்லது கடினமாய் வந்தால் ஆண்டவரிடம் போகலாம் என்பது சரியா? அப்போது காரியங்கள் நாம் நினைத்தபடி சந்தர்ப்பப்படுமா? எந்த சிறிய நோய்க்கும் ஆண்டவரிடம் போவதே சரி. அன்றன்றுள்ள ஆகாரத்திற்காக ஒவ்வொரு தினமும் ஜெபிக்கிறோமே; சாப்பாட்டுக்கு அதிகக் கஷ்டம் வந்தால் மட்டுமா ஜெபிக்கிறோம்? "ஆதலால் தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பாரென்று சொல்லியிருக்கிறார். ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போல கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்

படுத்திக் கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. (எபேசி. 5 : 14-16).

நோயாளிகள் யேசுநாதரிடம் போவதற்கு அவிசுவாசம் பெருத்த தடை. உலக காரியங்களிலே நம்பிக்கை வெகு சாதாரணமாய்க் காணப்படும். விதைக்கிறவன் அறுக்கலாம் என்கிற நம்பிக்கையோடே விதைக்கிறுன். எகிப்து தேசத்திலே நீல நதி பெருக்கெடுத்து, அதன் இருகரைகளும் புரண்டோடி, அதன் அருகிலுள்ள புலங்கள் யாவையும் நிரப்பி நிற்க, கிருஷிகர் சிறு படகுகளிலே விதைத் தானியங்களை எடுத்துக்கொண்டுபோய், தண்ணீரின்மேல் விதையைத் தூவிவிட்டுத் திரும்புவார்களாம். அவர்கள் ஆகாரத்தைத் தண்ணீரின்மேல் போடுவார்கள்; அநேக நாளைக்குப் பின்பு அதன் பலனைக் காணலாமென்று எதிர்பார்ப்பார்கள். (பிர. 11 : 1). அப்படியானல், பரம காரியங்களில் விசுவாசம் எங்கே? சொற்ப விசுவாசம் தோன்றினுல் அது பரிட்சிக்கப்படும்போது மறைந்துபோய் விடுகிறது. வியாதி துன்பம் நேரிடும்போது விசுவாசம் வளருவதற்குப் பதிலாகக் குறைந்துபோய் விடுகிறதே. பாவமானது விசுவாசத்திற்கு சத்துரு. பாவ உளையில் கிடக்கிறவனுக்கு விசுவாசம் எங்கேயிருந்து வரும்? பாவிகளின் நேசராலேயே விசுவாசம் பிறக்கவேண்டும். அவரே பாழான நெஞ்சிலே விசுவாசத்தை துவக்கு

கிறவரும், நடப்பிக்கிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிருர்.

கடைசியாக, பொல்லாத மனிதருடைய கூட்டுறவும் மனிதரை ஆண்டவரிடம் போகவிடாமல் தடுக்கக்கூடியதாயிருக்கிறதெனக் காணலாம். துன்மார்க்கமான வழிகளில் நடக்கப் பொல்லாதவர்களுடைய ஆலோசனையையும் ஒத்தாசையையும் அடைந்து ஜீவித்து வந்ததுபோல, தாங்கள் சம்பாதித்துக் கொண்ட பிணிகளையும் ரோகங்களையும் தீர்த்துக் கொள்ளவும் அவர்களுடைய கேடான வழிகளையே அனுசரிக்க ஏவப்படுவார்கள். பார்வை பார்த்தல், மந்திரித்தல், சாந்தி கழித்தல், சூனியம் பார்க்குதல் முதலிய அருவருப்புகள் அப்படிப்பட்டவர்களின் முறைகளே. அவைகள் மனிதரைக் கிறிஸ்துவண்டை போகவிடாமல் தடுத்துவிடும். சில பெலவீன மனுஷர் ஆரம்பத்திலே பாவமில்லை என்றெண்ணத்தகும் சிற்சில உதவிகளுக்காக மட்டும் பொல்லாத மனுஷரைச் சிநேகம் பண்ணிக்கொண்டபோதிலும், வர வர கவனிக்காமலே அவர்களின் வீணான அஞ்ஞானக் கிரியைகளையும் அனுசரிக்கும்படி சம்பவித்துவிடும். அவ்வழிகள் பிரயோஜனமற்றவைகள் என்று அனுபவத்தினுல் கண்டறிய அதிக நாளாகிவிடலாம். துன்மார்க்கருடைய ஆலோசனை மனிதர் தவறிப்போவதற்கு ஏதுகரமாயிருந்தால், துன்மார்க்கருக்கு நேரிடும் தண்டனைகள் மனிதர் மனந்திரும்புவதற்கு நல்ல எச்சரிப்பாக இருக்கவேண்டுமே. எந்த மனு

ஷனல் இடறச்செய்யும் காரணங்கள் வருகின்றனவோ அவனுக்கு ஐயோ! (பரி மத். 18 : 7). பிறனை இடறி விழச் செய்கிறவனே கொடும்பாவி. கொடும்பாவியைக் காலில் கயிற்றைக் கட்டி, மனுஷர் எச்சரிப்படையும்படி தெருத் தெருவாய் இழுத்து, ஊருக்கு வெளியே கொண்டுபோய், தீயினுல் கொழுத்திவிட்டாலென்ன? அப்பொழுது ஆண்டவருடைய அருள்மாரி ஏராளமாய்ப் பெய்யாதா? மனிதர் இடறிவிழக் காரணமாயிருப்பவன் எவனே அவன் கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அமிழ்த்திப்போடுவது நலமாயிருக்கும் என்று பாவிகளின் மீட்பரே சொல்லியிருக்கின்ருர். (பரி. மத். 18 : 6). அந்த ஏந்திரக்கல்லின் நடுவிலே துவாரம் உண்டு. சாதாரணமான கல்லைக் கட்டினுல் அது நழுவி விழுந்து விடலாம்; ஏனெனில் அதிலே துவாரம் கிடையாது. மேலும் கையிலே காலிலே கட்டினுலும் அது கழன்று போய்விடலாம். கழுத்திலே கட்டினுலோ அங்குமிங்கும் நகராது. துவாரமுள்ள அந்த ஏந்திரக் கல்லும் பிரளாது. அது மாத்திரமல்ல, அந்த ஏந்திரக்கல் சாதாரணமான ஏந்திரக்கல்லுமல்ல; அது லகுவாயிருக்கும். சொல்லப்பட்ட இந்தக் கல்லோ 'மூல பாஷையில் விளங்குகிறபடி' இரண்டு கழுதைகள் இழுக்கிற பளுவான ஏந்திரக்கல்லாம். அது அந்த மனிதனை அதோ கதியாய் சமுத்திரத்தின் ஆழத்திற்கே கொண்டுபோய்விடுமென்பது நிச்சயம். அவன் எந்த விதத்திலும் தப்பிக் கொள்ளவேமாட்டான். ஆகையால், பொல்லாத மனி

தருடைய கூட்டுறவு கூடவே கூடாது. அது மனி தரை ஆண்டவரிடம் போகவிடாமல் தடுத்துவிடும்.

திவ்ய வழி யேசுவே
வேறே வழி இல்லையே,
சாவா ஜீவன் பெறவே
அந்த வழி ஆசிப்பேன்.
நானோர் அந்தகன் ஐயா,
கைபிடித்து நடத்தும்.

3. அதிகாரம்.

வியாதிகளின் கொடூரம்.

வியாதிகளின் கொடூரங்களை அவற்றை உத்தரித்தவர்களை நன்றாயறிவார்கள். மேலும் எல்லா நோய்களையும் ஒருவரே பட்டறிந்ததுமில்லை. என்றாலும் ஒரே பிணியே ஒருவருக்கு லகுவாயும் வேறொருவருக்குக் கடுமையாயும் இருப்பதை சாதாரணமாய்க் காணலாம். இதன் காரணமென்ன? வியாதி கொடூரமாய்த் தோன்றுவது முக்கியமாய் அவரவருடைய மனதைப் பொறுத்தது என்றே சொல்லலாம். மானத சாஸ்திரத்தின்படி (Psychology) ஒருவருடைய யோசிக்கும் மனது (Reasoning mind) பாவத்தின் காரணத்தால் கடவுள்பேரில் நம்பிக்கை இல்லாமல் அதைரியப்பட்டுக் கிடந்தால், நோயானது கொடூரமாகவே இருக்கும். ஏனெனில், யோசிக்கும் மனதிலுள்ள எண்ணத்தை, அவரவருடைய கீழ் உணர்வுள்ள மனதானது (Sub-conscious mind) இரவும் பகலும் விடாமல் உழைத்து கொண்டுசெலுத்தும். ஆகவே, சரீர முழுவதிலும் நடந்தேறும் வேலைகள் நன்மைக்கானாலும் தீமைக்கானாலும் இந்தக் கீழ் உணர்வுள்ள மனதினாலேயே நடத்தப்படும். இந்தக் கீழ் உணர்வுள்ள மனதை சகல ஞான சிருஷ்டி கர்த்தாவானவர் மானிட தேகத்தில் அற்புதமாய் அமைத்திருக்கின்றார். கடவுள் பேரில் வைக்கும் நம்பிக்கைபி

ளுலே யோசிக்கும் மனதிலே தைரியமும் பொறுமை யும் மேற்கொண்டால், வியாதியானது கொடூரமில்லா மலும் சகிக்கக்கூடியதாயும் இருக்குமெனக் கண் டறிந்து கொள்ளலாகும். உலகத்திலுள்ள ஒவ்வொரு துன்பத்திற்கும் ஒரு போக்கையும் கடவுள் இயற்கை யிலேயே உண்டுபண்ணியுள்ளார். அவருக்கே சதா காலமும் மகிமை யுண்டாவதாக. ஆமென்.

ஒவ்வொரு விதமான பிணியும் ஒவ்வொருவித மான கொடூரத்தன்மை யுடையது. எந்த வியாதி யைத்தான் லகுவானதென்று சொல்லக்கூடும்? தலை வலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியு மாம். வாய்வுக் குத்துள்ளவன் சற்று நேரத்திற் குள்ளே சுருண்டு உருண்டு கிடப்பதை யார்தான் பார்க்கக்கூடும்? கடவுள் ஏற்படுத்திய தூக்கத்தை இழந்தவர்கள் என்ன சொல்லுவார்கள்? பல்வலி யானது தேகத்தினுடைய தன்மையை எடுத்துக்காட் டின போதிலும், அது எத்தன்மையானது? வயிற்று வலியைப்பற்றி யார்தான் அஞ்சாமலிருப்பார்கள்? இரத்தாசயத்தின் நோயைக்கண்டு வைத்தியர்களும் அஞ்சுவார்கள். ஒரு சொறிசிறங்குடையவன் சொன் னும்: "வேறே எந்த வியாதி வந்தாலும் பொறுத் துக் கொள்வேன். இது என்ன வியாதி! இரவிலும் தொல்லை, பகலிலும் தொல்லை. போகிறது, மறுபடி யும் வருகிறது; வருகிறது, மறுபடியும் போகிறது; இதென்ன! விளையாட்டா? என்றுனும். இன்னும் முறைப்பாடுகள் அனந்தம் உண்டு.

சரீர வியாதியின் அங்கலாய்ப்பு பெரிதுதான். "என் மதிகேட்டினிமித்தம் என் புண்கள் அழுகி நாற்றமெடுத்தது. நான் வேதனைப்பட்டு ஒடுங்கினேன்; நாள் முழுதும் துக்கப்பட்டுத் திரிகிறேன். என் குடல்கள் எரிபந்தமாய் எரிகிறது; என் மாம்சத்தில் ஆரோக்கியமில்லை. நான் பெலனற்றுப் போய், மிகவும் நொறுக்கப்பட்டேன்; என் இருதயத்தின் கொந்தளிப்பினால் கதறுகிறேன். ஆண்டவரே, என் ஏங்கலெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது; என் தவிப்பு உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் உள்ளம் குழம்பி அலைகிறது; என் பெலன் என்னை விட்டுவிலகி, என் கண்களில் ஒளிமுதலாய் இல்லாமற் போயிற்று. என் சிநேகிதரும் என் தோழரும் என் வாதையைக் கண்டு விலகுகிறார்கள்; என் இனத்தாரும் தூரத்திலே நிற்கிறார்கள்" என்றும், "பூமியின்மேல் ஒருவன் மரத்தை வெட்டிப் பிளக்கிறது போல, எங்கள் எலும்புகள் பாதாள வாய்க்கு நேராய் சிதறடிக்கப் பட்டிருக்கிறது" என்றும், "என் நாட்கள் புகையைப்போல ஒழிந்தது; என் எலும்புகள் ஒரு கொள்ளியைப்போல எரியுண்டது. என் இருதயம் புல்லைப்போல வெட்டுண்டு உலர்ந்தது; என் போஜனத்தைப் புசிக்க மறந்தேன். என் பெருமூச்சின் சத்தத்தினால், என் எலும்புகள் என் மாம்சத்தோடு ஒட்டிக்கொள்ளுகிறது. வனாந்தர நாரைக்கு ஒப்பானேன்; பாழான இடங்களில் தங்கும் ஆந்தையைப் போலானேன். நான் நித்திரை யில்லாமல், வீட்டின்மேல் தனித்திருக்கும் குருவியைப்போல

இருக்கிறேன்" என்றும் புலம்பவேண்டியதாயிற்றே.

சரீர வியாதியின் அங்கலாய்ப்பைவிட ஆத்தும வியாதியின் அங்கலாய்ப்பு மகா பெரியது; சந்தேகமில்லை. சரீர நோயின் வேதனையைவிட ஆத்தும நோயின் வேதனை மகா கொடூரமானது; விவரித்து முடியாது. ஆகவே, சரீர நோயின் வேதனையானது நல்ல போதனையைத் தருகிறது. ஆத்தும வேதனையினின்று தப்பித்துக்கொள்ள அது மனிதரை எச்சரிக்கின்றது. மனிதரைச் சீர்ப்படுத்த நோயின் வேதனையே போதுமானது. உணர்வுள்ள மனிதர் அதை அறிந்துகொள்வார்கள். மூடர் அதை அறியார். சரீரத்தில் ஜன்னி கண்டமாத்திரத்தில் நோயின் வேதனை மறைந்ததுபோல தோன்றினாலும், அது உயிருக்கு வெகு அபாயமானதென்று யாவருக்கும் தெரியும். அந்த நிலமையை எவரும் விரும்பார். ஆத்துமாவில் உணர்வு முற்றும் அற்றுப்போய் ஆத்தும வேதனையானது மனதுக்குத் தெரியாவிட்டால், அது ஆத்தும ஜீவனுக்கு மகா பயங்கரமான நிலமை என்று அறியவேண்டும். அந்த நிலமை தனக்குத் தெரியவே தெரியாது. மற்றவர்கள்தான் அதைக் கண்டுபிடித்து, உடனே அதற்குத் தகுந்த பரிகாரஞ் செய்யவேண்டும்; தாமதம் கூடாது. "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று யேசு பெருமான் வானநாட்டிலிருந்து வந்து விளம்புகின்றார்.

மரணத்தோடே பாவத்தின் சரீர சம்பளம் ஆதாமின் மக்களுக்குக் கிடைத்துவிடுகின்றது. மட்டுக்கு மிஞ்சிய நிர்ப்பாக்கியரான மனிதரும், தங்கள் வேதனையினிமித்தம் மரணத்தையே தேடுவதாகவும் வெளிப்படலாயிற்று. என்றாலும், நீதிமான்களும் மரிக்கிறார்கள்; துன்மார்க்கரும் மடிந்து போகிறார்கள். இதிலே வித்தியாசமில்லை. எல்லாரும் இந்த வழியேதான் போகிறார்கள். சரீரமானது இங்கே கொஞ்சக்காலம் இளைப்பாறுகிறது. சுமைதாங்கியைக் கண்டவர்களைப்போல அவர்கள் களிகூறலாம். பாவத்தினிமித்தம் மரணமும் வேண்டியதுதான். இதிலே வித்தியாசம் காணப்படாது. ஆனால், சரீர வேதனை இங்கே முடிவடைந்த போதிலும் ஆத்தும வேதனை முடிவடைகிறதில்லை. இது எப்படித் தெரியுமென்றால், பரிசுத்த வேதாகமத்தை நம்பவேண்டியதுதான். வேதாகமத்திலுள்ள சில காரியங்களை அனுபவத்தில் கண்டறிந்தால், வேதாகமத்திலே அறிவித்திருக்கும் மற்ற விஷயங்களையும் நம்பவேண்டியது நியாயமே. நம்பாதவர்கள், தேவனைப்பற்றி தங்கள் அனுபவத்தில், ஒன்றுமே அறியாதவர்கள் என்றே நினைக்கத்தகும். மரணத்திற்குப் பின்பு ஆத்துமா ஜீவித்திருக்கின்றது. மரணத்திலிருந்து பாதைகள் இரண்டாகப் பிரிகிறது. ஆத்துமாக்கள் போய்ச்சேரும் இடங்களும் இரண்டேயாம். இரு இடங்களுக்கும் இடையில் ஒரு பெரும் பிளப்பு உண்டு. இங்கேயிருந்து அங்கே போக முடியாது; அங்கேயிருந்து இங்கே வரமுடியாது. பின்பு,

கடைசி எக்காளம் தொனிக்கப்படும்பொழுது, எல்லோரும் தங்கள் தங்கள் சரீரங்களோடே உயிரோடெழுந்து நியாயத்தீர்ப்பு அடைவார்கள். நீதிமான்கள் சந்தோஷமுள்ள மோட்சபதவியை அடைவார்கள். இரட்சிப்பை அடையாதவர்கள் வேதனை நிறைந்த நரகத்தை அடைவார்கள். அங்கே இரட்சிப்பின் வழி கிடையாது. கதவும் அடைபட்டுப்போம். "கோடை காலமும் சென்றது, மாரி காலமும் சென்றது"; அவர்களோ இரட்சிக்கப்படவில்லை. நித்திய வேதனை அவர்களுக்குக் கிடைத்த பங்கேயாகும்.

உலக வேதனையானது நரக வேதனையைச் சுட்டிக்காட்டி மனிதருக்கு எச்சரிப்பைக் கொடுத்தது. வாதையைக் கண்டும் அவர்கள் மனம் விலகவில்லை. அவர்கள் இருதயம் மேன்மேலும் உரங்கொண்டு கடினப்பட்டது. ஞானமுள்ளவர்களோ இவைகளால் எச்சரிப்படைந்து உணர்வடைவார்கள். இதிலே பேதைகளும்கூட திசைகெட்டுப் போவதில்லை. பரியாசக்காரரோ எச்சரிப்பையும் ஞானத்தையும் அசட்டை செய்வார்கள். "மொட்டைத் தலையா! ஏறிப்போ" என்பார்கள். "நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் ரட்சித்துக்கொள்" என்பார்கள். பரியாசக்காரர் குணப்படுவது மெத்த அரிதான காரியமாகத் தோன்றுகின்றது.

ஆதலால், "தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்.

வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்'' (சங். 139 : 23-24). என்று ஜெபிப்போமாக.

வேதனைகள் யாவையும்
விநாடியிலே போக்கவல்லாய் !—நின்
பாதமதிலே விழுந்தேன்,
பரிந்தெனைக் கண்பாராய்.

4. அதிகாரம்.

கிலேயாத்தின் பிசின் தைலமும், இரண வைத்தியனும்.

"கிலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரண வைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னே ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற் போனாள்?" (எரே. 8 : 22).

அவர்கள் காதாரக் கேட்டும் உணராமலும் கண்ணாரக் கண்டும் அறியாமலும் இருக்கிறார்களே. கிலேயாத்திலே பிசின் தைலம் உண்டு. அங்கே இரண வைத்தியனும் உண்டு. "இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறதே. (ஏசா. 59 : 1-2). எசேக்கியா ராஜா வியாதிப்பட்டு மரணத்திற்கு ஏதுவாயிருந்தான். அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீர் உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குப்படுத்தும்; "நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்றான். அப்பொழுது

எசேக்கியா தன் முகத்தைச் சுவர்ப்புறமாகத் திருப்பிக் கொண்டு, கர்த்தரை நோக்கி: "ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும்" என்று விண்ணப்பம் பண்ணினன். எசேக்கியா மிகவும் அழுதான். ஏசாயா பாதி முற்றத்தைவிட்டு அப்புறம் போகிறதற்கு முன்னே, கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி, அவர் சொன்னது; உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ நான் உன்னைக் குணமாக்குவேன்; மூன்றும் நாளிலே நீ கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவாய். உன் நாட்களோடு பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன் என்று சொல்லுகிறார், என்று 2 ராஜாக்கள் 20:1-6ல் வாசிக்கிறோமே. மேலும் வனாந்தரத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் கொள்ளிவாய் சர்ப்பங்களினாலே கடிபட்டுச் செத்தார்கள். அப்பொழுது ஜனங்கள் மோசேயிடத்தில் போய் தங்களுக்காக விண்ணப்பம் பண்ணக் கேட்டார்கள். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஒரு கொள்ளிவாய் சர்ப்பத்தின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவை; கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப் பார்த்தால் பிழைப்பான் என்றார். அப்படியே மோசே ஒரு வெண்கல சர்ப்பத்தை உண்டாக்கி அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவைத்தான்; சர்ப்பம் ஒருவனைக் கடித்தபோது, அவன் அந்த வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்து பிழைப்பான், என்று

எண்ணாகமம் 21ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுளது. இந்த சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல, மனுஷ குமாரனும் சிலுவையிலே உயர்த்தப்பட்டார். அவரை நோக்கிப் பார்ப்பவர்கள் பிழைக்கவே பிழைப்பார்கள்.

இயேசு ரட்சகர் கிருபை பொருந்தினவராய் மனிதருக்குள்ளே வாசம் பண்ணினார். இந்தப் பரம வைத்தியனாகிய யேசுநாதர் நோக்கிப் பார்த்தாலும் சுகம். தூர இருந்து செய்தியனுப்பினாலும் சுகம். அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாலும் சுகம். அவர் அதட்ட பிசாசுகள் பறந்தோடிப் போயின. அவர் தொட குஷ்டரோகம் நீங்கிப் போயிற்று. அவர் கூப்பிட நாலு நாளைக்குமுன் மரித்துப்போனவன் உயிரோடே வந்தான். பின்னும், குருடனைப் பார்க்கச் செய்தார். சப்பாணியை நடக்கச் செய்தார். ஊமையனைப் பேசச் செய்தார். எவரையாவது அவர் புறம்பே தள்ளினதில்லை. பின்னும், சந்திரரோகம், ஜுரம், திமிர்வாதம் முதலிய நோய்களையும் அவர் நீக்கினார். எல்லாவற்றையும் அவர் நன்றாய்ச் செய்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதோ, பெதஸ்தாக் குளத்தை இயேசு பார்க்கப் போனார். முன்னே அவர் குருடனைப் பெதஸ்தாக் குளத்திற்கு அனுப்பவில்லை. அது சீலோவாம் குளம். அது பட்டணத்திற்குத் தென்கிழக்கே இருந்ததாகவும், பெதஸ்தாக் குளம் வடகிழக்கே இருந்ததாகவும் துலங்குகிறது. பெதஸ்தாக் குளத்

தில் ஒரு அற்புத சக்தியை ஏற்படுத்தினவர், சீலோவாம் குளத்தை தமது வார்த்தையினுலே பிரதிஷ்டை செய்தார். பெதஸ்தாக்குளம் எருசலேமின் ஆட்டு வாசலினருகே இருந்தது. (பரி. யோவான். அதி 5 : 2-10 வரை வாசித்துப் பார்க்க.). தேவாலயத்தில் செலுத்தப்பட்ட பலி முதலானவைகள் கழுவப்பட்ட ஜலம் இந்தப் பெதஸ்தாக்குளத்தில் விழுந்ததென்றும், அதிலே அற்புத குணங்கள் பொருந்தியிருக்கலாம் என்றும் சில வேத சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிருர்கள். இதற்கு ஆதாரமில்லை ; மேலும், பழைய பலியைப்பற்றியும், பரிசுத்த பண்டங்களைப்பற்றியும் உண்டாகும் பழைய விசுவாசம், புது ஏற்பாட்டுக்கும் புதிய விசுவாசத்திற்கும் இடங்கொடுக்கவேண்டும். சிலர் அந்தப் பெதஸ்தாக்குளத்தில் உண்டாயிருந்த அற்புத சக்தி, வேளாவேளைகளில் அதில் சுரக்கும் மின்சார ஊற்றினுல் உண்டானது என நினைக்கிருர்கள். இதற்கும் ஆதாரமில்லை. காரியத்தைக் கண்டு, அதற்குக் காரணத்தை ஏற்படுத்திப்போடுவது மனுஷ இயற்கை. இப்படி ஏற்படுத்தப்பட்டவைகள் சரியோ? தப்போ ? சில சாஸ்திர ஆராய்ச்சிகளைத் தப்பென்று, சாஸ்திரிகளே (Scientists) பின்னுலே கண்டுபிடிக்கிருர்களே. ஆதலால், சொல்லப்பட்டிருக்கிற சரித்திரக் குறிப்புகளை அப்படியே எடுத்துக்கொள்வது லேசும், நமது பாடங்களுக்குப் போதுமானதாயும் இருக்கிறதென்று நாம் அறிவோம். "சில சமயங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, தண்ணீரைக் கலக்குவான் ; தண்ணீர் கலங்

கின பின்பு யார் முந்தி அதில் இறங்குவானே அவன் எப்பேர்ப்பட்ட வியாதியஸ்தனுயிருந்தாலும் சொஸ்த மாவான்'' என்பது இங்கே வரையப்பட்டுள்ள சரித் திரக் குறிப்பு. இந்த சரித்திரத்தை எழுதிய பரி. யோவான் அப்போஸ்தலனே இதற்கிசைவாக, தாம் கடைசியில் எழுதிய, வெளிப்படுத்தின விசேஷம் 16 : 5ல் தண்ணீர்களின் தூதனைப்பற்றிப் பேசுகிருர். தேவதூதர் தேவனுடைய பணிவிடையாட்களும் அவரது திவ்ய சித்தத்தை நிரைவேற்றுகிற ஆவிகளு மாய் இருக்கிருர்கள். சுகம் கொடுக்கிற ஜீவ ஊற்று எப்படித் தோன்றினுலென்ன? இப்போது ஜீவ ஊற்றும் அதற்குக் காரணருமாகிய அவரே, பெதஸ் தாக் குளத்தை நேரில் பார்க்க வந்து விட்டார். இது பெரிய சலாக்கியம். மேலான காரியத்தை அங்கே காட்டி விட்டனர். இந்த மேலான ஜீவ ஊற்று யூதருக்குமட்டுமல்ல, சருவ லோகத்தாருக்கும் ஏற் பட்டுளது. முதலில் இறங்கினவன் மட்டுமல்ல, இரண்டாவது மூன்ருவது நாலாவது, கடைசியில் இறங்கினவனும் சுகமடைவான். தண்ணீர் கலக்கப் படும்போது என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடு கிறதற்கு ஒருவருமில்லை என்றும், நான் போகிறதற் குள்ளே வேருருவன் எனக்கு முந்தி இறங்கி விடு கிருன் என்றும் முறையிட இங்கே அவசியமில்லை. பெதஸ்தாக் குளத்தில் இவ்வளவு சங்கடத்துடன் சரீர சுகம் மட்டும் கிடைத்தது. முப்பத்தெட்டு வரு ஷம் வியாதியாயிருந்து பெதஸ்தாக் குளத்தின் நன்மை கிட்டாதவனுக்கோ, இயேசுநாதர் ஒரு சொல்லாலே

சரீர சுகத்தையுங் கொடுத்து, மேலான ஆத்தும சுகத் தையும் காட்டிவிட்டனர். அவரை யேசு என்று அறிந் தான். அந்தக் காலத்திலே ஆஸ்பத்திரிகள் கிடையா. அப்படி இருந்திருக்குமானால், அவைகளையும் யேசு ரட் சகர் சந்தித்திருப்பாரென நினைக்கத்தகும். தற்காலம் ஏராளமான ஆஸ்பத்திரிகள் ஏற்பட்டுள. ஆஸ்பத்திரி கள் யாவும் இரக்கமுள்ள கடவுளுடைய கிருபையின் எத்தனங்களே. ஆஸ்பத்திரி வேலைகளினாலே ஜனங் களுக்கு மிகுந்த நன்மைகள் கிடைக்கிறதென்று நாமெல்லாரும் அனுபவத்தினால் அறிகிறோமே. சகல நன்மைகளுக்கும் காரணராகிய கடவுளின் கிருபையினா லன்றி இவ்விஸ்தாரமான பூவுலகில் வேறே நன்மை யாது? ஆஸ்பத்திரிகளை பெதஸ்தாக் குளத்திற்கு ஒப்பிடலாம். பெதஸ்தா என்றால் இரக்கத்தின் வீடு என்றருத்தம். ஆஸ்பத்திரிகள் தேவனுடைய இரக் கத்தின் வீடுகளே. இயேசுரட்சகர் ஆஸ்பத்திரிகளைச் சந்திக்கிறார் என்று தைரியமாய்க் கூறலாம். "சொஸ்த மடைய விரும்புகிறாயா" என்றும் கேட்பார். விரும்பு வோருக்கு இன்னும் மேலான நன்மைகளையும் தரா திரார்.

மேலும், * இயேசு (ஜீசஸ்) நெரிந்த நாணலை முறித்துப் போடமாட்டார் என்றும், மங்கி எரிகிற திரியை அவித்துப்போடமாட்டார் என்றும் பார்க்கி றோம். இதோ! பதினெட்டு வருஷமாய்ப் பெரும்

* குறிப்பு :—'ஜீசஸ்' என்று தமிழிலேயும் வழங்கினால் நன்றாயிருக்கும். அப்பொழுது அது எல்லாப் பாஷை களுக்கும் பொதுவாகக்கூடும்.

பாடுள்ள ஒரு ஸ்திரீ அவரைக் குறித்துக் கேள்விப் பட்டு வந்தாள். அவளுக்குக் கொஞ்சம் விசுவாச மிருந்தபோதிலும், தைரியமில்லை. ஜனக்கூட்டத்திலே அவருக்குப் பின்னாலே வந்து, அவர் அறியமாட்டா ரென்று எண்ணி, அவரது வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள். யூதருக்குள்ளே வஸ்திரத்தின் ஓரங் களையும் அவைகளிலுள்ள வசனங்களைப் பற்றியும் என்ன அபிப்பிராயமிருந்தபோதிலும், அவர் தமது வல்லமையை அனுப்பி அவளை சுகமாக்கினார் என்று காண்கிறோம். (பரி. லூக். 8 : 43-48).

பின்னும், யேசு ரட்சகர் மனிதரில் முந்தி அன்பு கூறுகின்றார்; அவர்களைத் தேடியும் அலைகின்றார் என் றும் காணலாம். இதோ! அவர் வாசற்படியில் வந்து நின்று, தட்டி தட்டி கூப்பிடுகிறார்; காத்துக்கொண் டும் நிற்கிறார். என் பிரியமே! என் உத்தமியே! கதவைத்திற; என் தலை பனியினாலும், என் தலை மயிர் இரவில் பெய்யும் தூரலினாலும் நனைந்திருக்கிறது என்கிறார். அவருக்குச் செவிகொடுக்க சீயோன் குமா ரத்திக்கு வெகு தாமதமாகிவிட்டது. அவரோ போய்விட்டார். எப்படியானாலும், தாமதம் கூடவே கூடாது. அதின் நஷ்டம் மிகப் பெரியது. அவரோ போய் விட்டார் என்று அறிகிறோம். இவர் யார்? இவர் யாரோ, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப் படிகிறதே என்றனர் சிலர். நப்தலி நாட்டையும் செபு லோன் நாட்டையும் கடந்து வருகிற இவர் யார்? கேரூபின்களின் செட்டைகளின்மீது வரும் இவர் யார்? சூரியனைப்போல இலங்குகின்ற இவர் யார்? மோட்ச

மகிமையைக் காட்டுகின்ற இவர்தான் யாராயிருக்க லாம்? அவர் ராஜாதி ராஜனுடைய ஒரே குமார னுமே. அவர் அனுதியாயிருக்கிறவராமே. அவர் இந்தப் பூவுலகை சிருஷ்டித்தவராமே. அன்பருள்ளத் தில் தங்குகிறவராமே, தாயினும் அதிக நேசராமே. தன்னையும் கொடுத்தவராமே. பாவிகளின் நேச ராமே என்று சொல்லினர். இந்த சீயோன் குமாரத்தி யின் நேசமீட்பர் இவரேதான். ஆனால் சீயோன் குமாரத்தி தாமதிக்கவே, அவர் போய்விட்டார். பின்பு சீயோன் குமாரத்தி விழித்தெழும்பி ஆத்தும நேசரைத் தேடி வீட்டைவிட்டுப் புறப்படவே, வழி யிலே காவலாளர் அவளைக் கண்டு, அடித்து, காயப் படுத்தி, போர்வையையும் பிடுங்கிக்கொண்டு அவளை அனுப்பிவிட்டார்கள். அதன் பின்பு சீயோன் குமாரத்தி தன் நேசரை வீதியிலே தேடித்திரியும் போது, எருசலேமின் குமாரத்திகளைக் கண்டு: எரு சலேம் குமாரத்திகளே! நீங்கள் என் நேசரைக் கண் டீர்களா? கண்டீர்களானால் அதை எனக்குச் சொல் வீர் என்றனள். எருசலேம் குமாரத்திகள்: கன்னி கையே! உன் நேசர் எப்படிப்பட்டவர்? அவர் எதி ருலே விசேஷித்தவர்?

சீயோன் குமாரத்தி: "என் நேசர் வெண்மையும் சிவப்புமானவர்; பதினையிரம் பேர்களில் சிறந்தவர். அவர் தலை தங்கமயமாயிருக்கிறது; அவர் தலைமயிர் சுருள் சுருளாயும், காகத்தைப்போல் கருமையாயுமிருக் கிறது. அவருடைய கண்கள் தண்ணீர் நிறைந்த நதி

களின் ஓரமாய்த் தங்கும் புருக் கண்களுக்கு ஒப்பான வைகளும், பாலில் கழுவப்பட்டவைகளும், நேர்த்தியாய்ப் பதிக்கப் பட்டவைகளுமாயிருக்கிறது. அவர் கன்னங்கள் கந்தவர்க்கப் பாத்திகளைப்போலவும், வாசனையுள்ள புஷ்பங்களைப் போலவுமிருக்கிறது. அவர் உதடுகள் லீலி புஷ்பங்களைப் போன்றது, வாசனையுள்ள வெள்ளைப்போளம் அதிலிருந்து வடிகிறது. அவர் கரங்கள் படிகப்பச்சை பதித்த பொன் வளையல்களைப்போலிருக்கிறது; அவர் அங்கம் இந்திர நீல ரத்தினங்கள் இழைத்த பிரகாசமான யானைத் தந்தத்தைப் போலிருக்கிறது. அவர் கால்கள் பசும் பொன் ஆதாரங்களின்மேல் நிற்கிற வெள்ளைக்கல் தூண்களைப்போலிருக்கிறது; அவர் ரூபம் லீபனோனைப்போலவும் கேதுருக்களைப்போலவும் சிறப்பாயிருக்கிறது. அவர் வாய் மிகவும் மதுரமாயிருக்கிறது; அவர் முற்றிலும் அழகுள்ளவர். இவரே என் நேசர்.'' (உன்னத. 5 : 10—16). அவர் வசனம் தேனிலும் தேன் கூண்டிலிருந்து ஒழுகும் தெளி தேனிலும் மதுரமானது. அவரது விளம்பரம் என்னவெனில்: "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நொருங்குண்டவர்களுக்கு காயங்கட்டுதலையும், சிறுமைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்; கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச்சரிக்கட்டும் நாளை

யும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்திற்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்.'' (ஏசா 61: 1—3.) என்பதே.

எருசலேம் குமாரத்திகள்: நீ கூறிய லக்ஷணமுடையவரை நாங்கள் காணவில்லை. ஆனால் ஒரு மனுப்புத்திரனைப் பார்த்தனம். அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; இச்சிக்கப்படத்தக்க ரூபமும் அவரிலே இல்லை. கள்ளனைப்போல பிடிபட்டு, இகழப்பட்டு, அடிகளினாலே கன்னமும் வீங்கி, முதுகெல்லாம் ரத்தவெள்ளம் புரண்டு, முற்றும் கறப்பாய்த் தோன்றிய ஒருவரைப் பிலாத்து, இதோ! இந்த மனுஷன் என்று காட்டினான். அவர்தானோ உன் நாயகர்? அதோ! கொல்கதா மலையைப் பார்.

சீயோன் குமாரத்தி: இதோ! கொல்கதா மலைக்கே வந்துவிட்டேன். ஆ! இதென்ன காட்சி. என் நேசர் சிலுவையில் மாண்டனரே.

இதெல்லாம் என் நிமித்தமாகத்தானே அவருக்கு நேரிட்டது. என்னுடைய மீறுதல்களினிமித்தந்தானே அவர் நொறுக்கப்பட்டார் என்று காண்கிறேன். இதைவிட பெரிய அன்பு என்ன?

ஆகா, குருடர் கண்ணைத் திறந்த உம்மைக் குறடாலடித்தனரோ!

செவிடர் செவியைத் திறந்த உம்மை சென்னியில் அடித்தனரோ!

தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தவண்ணம், உழுகிறவர்கள் உமது முதுகின்மேல் உழுதனரோ!

மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல இருந்தீரோ!

நீர் கட்டளையிட்டால் பதினுயிரம் லேகியோனுக்கதிகமான தூதர் ஓடிவரமாட்டார்களோ!

மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சிக்கவில்லை என்று பரியாசஞ் செய்கிறுர்களே!

இதோ! என் ஆத்துமாவை ஒரு பட்டயம் உருவிப்போகிறது போலிருக்கிறதே என்று புலம்பி மூர்ச்சித்து விழுந்தனள்.

ஆத்துமநேசர் உலகத்திற்கு யாவையும் செய்து முடித்தனர். சொந்த சத்துவத்தினுலேயும், தாம் சொன்னபடியேயும் மூன்றும் நாளிலே உயிர்த்தெழுந்தார். இப்போதும் நம்மோடிருக்கிறுர். ஆகவே, சிலுவையின் வெற்றி நமக்குச் சொந்தம். "இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்." தமது திரு உதிரத்தாலே சகல பிணிகளையும் போக்கும் அரிய பெரிய செந்தூர

மாத்திரையைச் செய்தனரோ! அதன் மகிமை மா பெரிது; விஸ்தரிக்க முடியாது.

எண்ணில்லாக் கைகள் தந்து எழிதிட ஏவினும்
இணையிலா மாட்சிகூற ஏலாதே—சாலவே
கேடுறும் பிழைகளின்றி கிருஸ்தைய னருளினாலே
கிறுக்கிட ஆவல்கொண்டு கிட்டினன்.

எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. யாரும் வாரும். இயேசு "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" (பரி. யோ. 14 : 14) என்று திருவாக்கருளியிருக்கின்றார். அப்படியே நடந்து வருகிறது. அவரவரே கண்டறிந்து கொள்ளலாம்.

'பின்னே, என் ஜனமாகிய குமாரத்தி ஏன் சொஸ்தமடையாமற்போனாள்?' இனி வியாதியஸ்தரைப்பற்றி சற்றே ஆராய்ந்தறிவோம். இரணமானது அறுக்கப்பட்டால்தானே பூரண சுகத்திற்கு வரும். மேற்பூச்சாய் சுகமாக்கிக்கொண்டால் அது நீடித்திருக்காது, அல்லது திருப்பி வரக்கூடியதாயிருக்கும். அப்படியே பாவமும் வெளிப்படுத்தப்படவேண்டும். அது எப்படியும் தொலைக்கப்படவேண்டும்; மற்றப்படி பிரயோஜனம் ஒன்றுமே இல்லை. மேலும், ஆத்துமாவிற்கும் சரீரத்திற்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது. ஆத்தும சுகங் கெட்டால் சரீர சுகமும் கெடக்கூடும். அல்லாமலும், வியாதியானது ஒருவகையாய் மனிதருக்குப் பிரயோஜனப்படுகிறது என்று சொல்லவேண்டும். அது திரேகத்தினுடைய ஸ்திதியை எடுத்துக்காட்டு

கின்றது. மற்றப்படி உள்ளேயிருக்கும் ஒழுங்கீன மானது, மனிதரைத் திடீரென்று கொன்றுவிடும். பரிகாரம் செய்ய சமயமிருக்காது, அல்லது பிந்திப் போய்விடும். அது மனிதரை எச்சரிக்க தேவனால் அனுப்பப்பட்ட தூது.

மேலும், வியாதியானது பரம பிதாவானவர் தய வாய் அனுப்பியிருக்கிற சிக்ஷை என்று நம்பி, அவ ருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, பாவத்தைவிட்டு மனந்திரும்பி, அவருடைய சித்தத்திற்கு முற்றிலும் கீழடங்கினால், அந்த வியாதியானது நித்திய ஜீவ வழி யிலே நடக்க உதவியாயிருந்து பிரயோஜனமாய் முடி யும். ஆதலால் வியாதியாகிய கர்த்தருடைய சிட் சையை நலமென்று ஒப்புக்கொள்ளவேண்டும். ஏனெ னில், "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்" என்று சொல்லப்பட் டிருக்கின்றது (எபி. 12 : 6). "நான் நேசிக்கிறவர்கள் எவர்களோ அவர்களைக்கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு." (வெளி. 3 : 19). "தேவன் தம்முடைய பரிசுத்தத் திற்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம் முடைய பிரயோஜனத்திற்காகவே நம்மை சிட்சிக் கிறார். எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷ மாய்க் காணாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும் பிற் காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத்தரும்." (எபி. 12 : 10-11). சாம்

பலேத் தின்கிற பிள்ளைக்கு, அதன்பேரிலேதான் நாட்டம் இருக்கும். அதனால் கெடுதி வருமென்று பெற்றோர் எச்சரித்தபோதிலும் கவனிக்காதே இருக்கும் பிள்ளைக்கு, பிரம்புதான் ஏற்றது. அவ்வாறே பாவமாகிய சாம்பலை நாடும் மானிட மக்களுக்கு பிரம்பாகிய வியாதிதான் ஏற்றது.

சுகவீனர்கள் தற்சோதனை செய்து தமது குற்றங்களைக் கண்டுபிடித்தல் மெத்த அவசியம். தேவனுக்கும் மனுஷருக்கும் செய்யவேண்டிய கடமைகளில் குறைவு உண்டா என்று பார்க்கவேண்டும். யாருக்காவது பொருள் நஷ்டம் உண்டாக்கியிருந்தால் கூடியமட்டும் அதற்குப் பதில் கொடுக்கவேண்டும். தான தர்மங்கள் செய்வதை மறந்திருந்தால் அதையும் கண்டுபிடிக்கவேண்டும். எப்படிப் பணம் சேர்க்கலாம் என்கிற ஆசையையும், எப்படி சிற்றின்பத்தை அனுபவிக்கலாம் என்கிற ஆசையையும் தள்ளிப்போடவேண்டும். கவலைப்படுதலும் விசாரப்படுதலும் கூடாது. அவைகளும் சுகவீனத்திற்கும் காரணங்களாகும்.

திருமூவர் வசித்திடும் சரீராலயங் கெடுக்கும்
பெருந்தீனி குடிவெறி, பின்னுமந்த வேசித்தனம்
பற்றிடுந்தொன் காமரோகம் உற்ற இச்சை மார்க்கமதை,
நற்றவிழி லக்ஷயெனக் கள்ளமின்றித் தள்ளவேண்டும்.

மேலும், தனக்குப் பாவமில்லாததாகத் தோன்றும் பாவங்களையும் கவனித்தல் அவசியம். அவைகளும் லேசானவைகளல்ல. அவைகளையும் பரிசுத்த ஆவியானவர் எடுத்துக்காட்டும்படி பிரார்த்திக்க வேண்

டும். இவைகளையெல்லாம் தோண்டியெடுப்பது மன திற்கு வெகு சங்கடமாகத் தோன்றும். வீட்டிற் குள்ளே அநேக திருடர்கள் வந்து புகுந்துவிட்டால், அவர்களெல்லோரையும் துரத்திவிட வீட்டுக்காரன் முயற்சி எடுப்பானே. அதில் எவனாவது தப்பி உள்ளே பதுங்கியிருந்தால், அதை அவனுக்கு அறி விப்பவர்கள் பேரில் சந்தோஷப்படவேண்டியதா? வருத்தப்படவேண்டியதா? சந்தோஷப்படவேண்டி யதுதானே. பின்னே ஆத்தும விஷயத்தில் ஏன் அப் படியில்லை? சொல்லுபவர்மேலே என்ன கோபம்! எவ்வளவு சண்டை? ஆனால், வீட்டிற்குள்ளே பதுங்கி யிருக்கும் திருடனையும் கண்டுபிடித்து துரத்திவிடாத பட்சத்தில், வீட்டிலுள்ள பொருட்கள் கொள்ளை போகும் என்பது பிரத்தியட்சம். பாவத்தை எடுத் துக் காட்டுபவர்கள்மேல் கோபப்படவேண்டியது என்ன? அது என்ன ஆவி?

பின்னும், ஆத்தும நோயாகிய பாவத்தின் அடி வேரையும் தீர விசாரித்தறிவது அத்தியாவசியமாகும். அதைக் கவனிக்காவிடின் ஒன்றுமே முடியாது. பரி. யர்க்கோபு: "இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத் தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மர ணத்தைப் பிறப்பிக்கும்" (பரி. யாக். 1:15) என்று கூறினர். பரி. பவுல்: "இச்சியாதிருப்பாயாக என்று நியாயப் பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் அறியாமலிருப்பேனே" என்ற னர். (ரோ. 7:7). ஆகவே, இச்சையே சகல பாவங்

களுக்கும் ஆதாரம் என்று காண்கிறோம். முதல் முதல் இருதயத்தின் சிந்தனைகள் சுத்தமாகவேண்டும். இதற்கு மாம்ச சிந்தை அழியவேண்டும். ஏனெனில் "மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப் படியாமலும், கீழ்ப்படியக் கூடாமலும் இருக்கிறது." (ரோ. 8 : 7).

ஆனால், மாம்ச சிந்தையை அழித்துவிடுவது லேசான காரியமல்ல. தன் சுயபெலத்தினால் முடியவே முடியாது. "எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக் கூடுமோ? கூடுமானால், தீமை செய்யப் பழகின நீங்களும் நன்மை செய்யக் கூடும்," என்று சொல்லப்பட்டுளது. (எரே. 13 : 23).

பாவமதை ஜெயிப்பது பாவியாலே முடியாது;
பாவமதைத் தள்ளிவிட ஆவலுமே வந்திடாது;
தேவனுட கிருபையால் ஜீவனையே பெறவேணும்;
யாவருக்கு முண்டு, அதை எளிதிலே கண்டு கொண்
டான்.

இதற்கு உன்னதபலம் தேவை என்று துலங்குகின்றது. "பலத்தினாலுமல்ல; பராக்கிரமத்தினாலுமல்ல; கர்த்தருடைய ஆவியினாலே ஆகும்" என்று சகரியா தீர்க்கதரிசி சொல்லுகின்றார். (சகரி 4 : 6). மனுஷனால் கூடாதுதான். கர்த்தருடைய ஆவியினாலேதான் ஆகும். ஆவியினாலே சரீரத்தின் இச்சை

களை அழித்தால் பிழைக்கலாம் என்று பார்க்கிறோம். மனதிலே மாம்ச எண்ணம் தோன்றும்போது, உன்னத ஆவி அதை அடக்கும், கீழான பாவ ஆவியால் உண்டாகும் யோசனையை, மேலான சுத்த ஆவி அடக்கும். இப்படியாக பாவத்தின் ஆரம்பம் அல்லது வேர் எடுபடவேண்டும்; ஜெயத்தின்மேல் ஜெயம் பெறவேண்டும்.

மேலும், கர்த்தருடைய ஆவியினாலுண்டாகும் பலத்த கிரியைகளையும் நாம் அறியலாம். இதோ! கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கத்தரிசியை எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவிலே நிறுத்தி: ஆவியே, நீ காற்றுத்திசை நான்கிலுமிருந்து வந்து, கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு, இவர்கள் மேல் ஊது என்கிறார் என்று சொல் என்றார். எசேக்கியேல் தனக்குக் கற்பிக்கப்பட்டபடியே தீர்க்கதரிசனம் உரைத்தபோது, ஆவிகள் அவைகளுக்குள் பிரவேசித்து உயிரடைந்து நின்றன என்று பார்க்கின்றோம். (எசே. 37 : 1-14). இது இஸ்ரவேலரின் மீட்பைக் காட்டும் தரிசனமானாலும், கர்த்தரின் ஆவியினால் நடக்கும் பலத்த கிரியைகளைத் தெரியக் காட்டுகிறதாயிருக்கிறது. ஆதலால் எவ்வளவு நம்பிக்கையற்ற நிலமையிலிருந்தபோதிலும், கர்த்தருடைய ஆவியினாலே ஆகும் என்பது நிச்சயம்.

மேலும், கர்த்தருடைய ஆவி, கேட்போருக்குக் கிடைக்கும் என்பதும் நிச்சயம். "கேளுங்கள், அப்

பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். உங்களில் தகப்பனுயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங் கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானு? மீனைக் கேட்டால் மீனுக்குப் பதிலாகப் பாம்பைக் கொடுப்பானு? அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானு? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா" என்று இயேசு சொல்லியிருக்கின்ருர். (பரி. லூக் 11:9-13). அவரே தேவனுடைய வலது பாரிசத்தில் நின்று பரிந்து பேசுகிறவராயுமிருக்கிருர்.

"எவர்கள் தேவனுடைய ஆவியினுலே நடத்தப்படுகிருர்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிருர்கள்." (ரோ. 8:14). அவர்கள் 'உலகம் தரக்கூடாத சமாதானத்தையும் சந்தோஷத்தையும்' பெற்று, பரிசுத்தத்தின் பல படிகளிலும் ஏறுவார்கள். அவர்கள் 'பலத்தின்மேல் பலமடைந்து, ஜெயத்தின்மேல் ஜெயமடைந்து' சீயோனுக்கு வருவார்கள்; ஜீவ கிரீடமும் பெறுவார்கள். இதோ! சீயோன் குமாரத்தி உள்ளாக பூரண மகிமையுள்ளவள். அவள் உடை முழுவதும் பொற்சரிகையாயிருக்கிறது. அவள் சந்திரனைப்போல அழகுள்ளவள்.

"நேசம் மரணத்தைப்போல் வலிது; நேச வைராக்கியம் பாதாளத்தைப்போல் கொடியதாயிருக்கிறது; அதின் தழல் அக்கினித் தழலும் அதின் ஜ்வாலை கடும் ஜ்வாலையுமாயிருக்கிறது. திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்கமாட்டாது, ஒருவன் தன் வீட்டிலுள்ள ஆஸ்திகளையெல்லாம் நேசத்துக்காகக் கொடுத்தாலும், அது முற்றிலும் அசட்டை பண்ணப்படும்." (உன். 8 : 6—7). "தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்." (1 யோ. 4 : 16). "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூறுகிறோம்." (1 யோ. 4 : 19). "ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை." (1 யோ. 2 : 15). மெய்யான அன்பு மேலான அன்பை நாடும். அன்பை அன்பு சந்திக்கும்.

"ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்." (வெளி. 21 : 7).

('சரச சாம தான'—என்ற மெட்டு).

இராகம் - காபி.] **[தாளம் - ஆதி.**

பல்லவி.

சருவ லோக ராஜ ஜேசுவுக்கே மகிமை
சதா காலமும் உண்டாவதாக.

அநுபல்லவி.

சிருஷ்டி யாவுமிக வணங்கிப்போற்ற
ஜெய மல்லேலூ யாவாம் சந்தத மங்களமாம்.

சரணங்கள்.

1. விம ரிசையா கவின்னி கைகூட்டி யந்த
விசித் ரகேரு பின்சேரா பீன்புகழ் வர்
அடிக்கப்பட்ட தேவாட் டுச்குட்டி வாழ்க
அதி பாசமேறி குருசே றியகோன் வாழ்க. (சருவ)

2. சுர ரெக்காள மதிபே ரோசையா யூத
திரள் பேர்தீம்தீ மெனந டனஞ்செய் வர்
அர சகுல கன்னி யின்மைந்தன் வாழ்க
பர மராஜ ராஜஸ்ரீம ஹாஜேசு வாழ்க. (சருவ)

3. திரு வன்பைரு சித்தோரன் பின்மலர் தூவி
தினங் களித்து அமிர்த கீதஞ்சொல் வர்
திருப் பிதாவ லமத் தியஸ்தர் வாழ்க
தின முசோப னமங்கள மேசையா வாழ்க. (சருவ)

5. அதிகாரம்.

பரம வைத்திய மாணுக்கர்.

பரம வைத்தியனுகிய ஏசுநாதரிடத்தில் கற்றுக்கொண்டவர்கள் உண்டு. அவர்கள் அவருடைய முறைகளேயே உபயோகித்து, அவருடைய சத்துவத்தினுலும், அவருடைய நாமத்தினுலும், அவரைப் பற்றும் விசுவாசத்தினுலும் வியாதிகளேச் சுகப்படுத்தினுர்கள். இயேசு நாதரின் சீஷர்கள் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்க அனுப்பப்பட்டபோது, சகல பிசாசுகளேயும் துரத்தவும், வியாதியஸ்தர்களேக் குணமாக்கவும் அவர்களுக்கு அதிகாரமும் வல்லமையும் கொடுக்கப்பட்டது. அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, பிணியாளிகளேக் குணமாக்கினுர்கள். தேவ நாமத்தை பிரஸ்தாபிக்கவும், அவருடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கவும் தங்களுடைய அற்புத வல்லமையை உபயோகித்தார்கள். பரி. பவுலும் அந்தப்படியே செய்தார் என்று காண்கிருேம். அந்தப்படியே, தேவ வேலே செய்கிற கிறிஸ்தவர்கள் ஆவியின் வெவ்வேறு வரங்களே உடையவர்களாஞலும், அவ்வித நோக்கத்துடனே தான் செய்யவேண்டும். வேறே எந்த நோக்கமும் கூடாது. தேவன் உதவிபுரிவாராக.

ஒரு சமயத்திலே இயேசு நாதருடைய சீஷர்களிலொருவன் அவரை நோக்கி: ‘‘போதகரே, நம்மைப்

பின்பற்ருதவன் ஒருவன் உமது நாமத்தினுலே பிசாசு களைத் துரத்துகிறதைக் கண்டோம்; அவன் நம்மைப் பின்பற்ருதவனுனதால், அவனைத் தடுத்தோம்'' என்ருன். அதற்கு இயேசு: "அவனைத் தடுக்கவேண்டாம்; என் நாமத்தினுலே அற்புதஞ் செய்கிறவன் எளிதாய் என்னைக் குறித்து தீங்குசொல்லமாட்டான். நமக்கு விரோதியாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிருன்'' என்ருர். (பரி. மாற். 9 : 38-40). அப்படிப் பட்டவர்களைத் தடை செய்யலாகாதுதான். அவருடைய நாமம் ஊற்றுண்ட பரிமளம்.

பரி. யாக்கோபு: "உங்களில் ஒருவன் வியாதிப் பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானுக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினுலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனுனுல் அது அவனுக்கு மன்னிக்கப்படும்'' என்றும், "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது'', என்றும் சொல்லுகின்ருர். (பரி. யாக். 5 : 14-16). மேலும், ஏசு ரட்சகர்: "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினுல், என்னை விசுவாசிக்கிறவன் நான்

செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்" என்று திருவுளம் பற்றினார். (பரி யோ. 14 : 12-14). ஆகவே, ஜெபத்தினால் வியாதிகள் சுகப்படும் என்று திட்டமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. அற்புத வரம் இல்லாவிடினும், ஜெபத்தினாலே எவரும் வியாதிகளைச் சுகப்படுத்தலாம் என்று அறிகிறோம்.

இன்னும் என்ன செய்யானையா? ஜெபமாந்தன்
இன்னும் என்ன செய்யானையா?

சிங்கமதின் வாயடைத்த தானியேலைக் கேட்டுப்பாரு
செத்தவனை எழுப்பின எலிசாவைக் கேட்டுப்பாரு [பாரு
மழையை அடைத்துப்போட்ட எலியாவைக் கேட்டுப்
பிள்ளைவரந்தன்னைப் பெற்ற அன்னாளையும் கேட்டுப்பாரு.

இதோ! ஒரு சந்திரரோகியை சீஷர்கள் ஒன்பது பேரிடத்திலும் ஒருவன் கொண்டுவந்தான். அவனைச் சொஸ்தமாக்க அவர்களால் கூடாமற் போயிற்று. இயேசு மலையிலிருந்து இறங்கினபோது, பிசாசை அதட்டி அவனை சொஸ்தமாக்கினார். பின்பு சீஷர்கள் அவரிடத்தில் தனித்து வந்து, அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று என்று கேட்டார்கள். அதற்கு அவர்: உங்கள் அவிசுவாசத்தினாலே தான் என்றும், இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி வேறெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது என்றும் சொன்னார். (பரி. மத்.

17 : 14-21). சுகப்படுத்துவோரிடத்தில் சரியான விசுவாசம் இல்லாவிட்டால் பேய்கள் ஏய்த்துவிடும் என்று அறிகிறோம். உபவாசம் ஜெபத்திற்கும், ஜெபம் விசுவாசத்திற்கும் அனுசரணையாயிருக்கும்.

தற்காலத்தில் வியாதிகளைச் சுகப்படுத்த முயற்சியெடுத்துக் கொள்பவர், வியாதியஸ்தருடைய அவிசுவாசத்தினாலேதான் பெருத்த தடை ஏற்படுகிறது என்று பலமுறையும் முறையிடலாம். அது வாஸ்தவந்தான். எப்படியென்றாலும் வைத்தியனே, உன்னைத்தானே குணமாக்கிக்கொள் என்னும் பழமொழியைச் சொல்வார்கள் அல்லவா? சந்திரரோகியின் தகப்பன் இயேசுவினிடத்தில்: நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால் எங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று அவிசுவாசமுள்ளவனாய்ச் சொன்னான். உடனே ஏசு ரட்சகர் அவனுடைய அவிசுவாசத்தைக் குறித்து அவனுடனே பேசினார். அப்பொழுது அவன்: என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான் என்று அறிகிறோம். (பரி. மாற். 9 : 22-24 பார்க்க). ஆம், அவிசுவாசத்தை நீக்கவேண்டும். மற்றப்படி ஒன்றுமே முடியாது.

இயேசு ரட்சகருடைய சிறந்த பாடசாலையில் தினம் தினம் கற்றுக்கொள்ளவேண்டும்.

"என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்," என்றார், (பரி. மத். 11 : 28).

('மரியாத' என்ற கீர்த்தனைப்படி).

இராகம் - சங்கராபரணம்.] [ஆதி - தாளம்.

பல்லவி.

மறவாதே ஜேசுவை,

அனுபல்லவி.

மரணாக்கினை நீக்கியே போக்கியே
வரமேழும் நாருக் கிந்தார்.
சுரம் : பமபகாம ரிகமகாரி

சரணம்.

அமிர்த இங்கிர்த அறிவரிதான
ஆத்தும நேசரேசு வைமறவாதே,
தமியோருக்காய் தமது ஜீவனைத்
தந்து மகா மீட்புண்டாக்கினர்—பமபகாம.

6. அதிகாரம்.

சுகவீனருக்கு எச்சரிப்புகள்.

"இஸ்ரவேலிலே தேவனில்லையென்று நீங்கள் எக்ரோனின் தேவனுகிய பாகால்சேபூலிடத்தில் விசாரிக்கப்போகிறீர்கள்? இதினிமித்தம் நீ ஏறின கட்டிலிருந்து இறங்காமல் சாகவே சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறூர்'' என்று கூறப்பட்டுளது. (2 ராஜா 1 : 2-6 பார்க்க.) "அகசியா சமாரியாவிலிருக்கிற தன் மேல்வீட்டிலிருந்து கிராதியின் வழியாய் விழுந்து, வியாதிப்பட்டு: இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனு என்று எக்ரோனின் தேவனுகிய பாகால் சேபூலிடத்தில் போய் விசாரியுங்கள் என்று ஆட்களை அனுப்பினுன்.'' அப்போது எலியாத் தீர்க்கதரிசி புறப்பட்டுப்போய், அந்த ஆட்களுக்கு எதிர்ப்பட்டு, அகசியா ராஜாவுக்கு இந்த எச்சரிப்பைச் சொல்லியனுப்பினுன். இது நல்ல எச்சரிப்பு! வியாதியஸ்தர்கள் ஜோசியம் பார்ப்பதும், மந்திரவாதிகளிடத்தில் போவதும், பார்வை பார்ப்பதும், நிமித்தம் பார்ப்பதும், அஞ்சனம் பார்ப்பதும், மந்திரித்த கயிறுகளைக் கட்டுவதும், பெரிய அறிவீனங்களென்றும் தங்களுக்கே கேடுண்டாக்குமென்றும் புத்திசாலிகள் யாவரும் அறிந்து கொள்ளலாம். ஆதலால், பாகால் சேபூலிடத்திற்குப் போகவேண்டாம். அவனுலே என்ன செய்ய முடியும்? மாயையிலும் லேசானவை

களைத் தேடலாமா? இஸ்ரவேலிலோ தேவன் உண்டு.

மேலும், வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ள வேண்டாம். கொல்லவும் உயிர்ப்பிக்கவும் நான் தேவனா? என்று பிதற்றவும் வேண்டாம். இதோ! சீரியா தேசத்திலே அடிமையாயிருந்த ஒரு சிறு பெண் தன் நாச்சியாரைப் பார்த்து: என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்; அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கி விடுவார் என்றாள். பின்னால் இஸ்ரவேலின் ராஜாவுக்கு அதைப்பற்றி நிருபம் வந்த போது தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: 'கொல்லவும் உயிர்ப்பிக்கவும் நான் தேவனா'? என்றான். அப்பொழுது எலிசா: அவன் என்னிடத்தில் வந்து இஸ்ரவேலிலே தீர்க்கதரிசி உண்டென்பதை அறிந்துகொள்ளட்டும் என்று சொல்லியனுப்பினான். அதன் பின்பு நாகமான் எலியா கட்டளையிட்ட பிரகாரம் செய்து தன் குஷ்டரோகம் நீங்கி சுகமடைந்தான். (2 ராஜா. 5ம் அதிகாரம் பார்க்க.) இஸ்ரவேலிலே தீர்க்கதரிசியும் உண்டு.

பாருங்கள், இஸ்ரவேலிலே எத்தனையோ குஷ்டரோகிகள் இருந்தபோதிலும் அவர்கள் சுகமடையவில்லை; இந்த அந்நியன் போய் சுகமடைந்தான் என்று காண்கிறோம். இது ஒரு பெரிய விந்தை! சொந்த நாட்டில் உள்ளவர்களுக்கு ஏன் தெரியவில்லை? முந்திய காலத்தில் தண்ணீர் இல்லாமல் அழுது

கொண்டிருந்த ஆகாருக்கு, தேவன் அவள் கண்களைத் திறந்தபின்தான் துறவு இருந்தது தெரியவந்தது. (ஆதி. 21 : 19). பிலேயாமுக்கு எதிரே பட்டயம் உருவிநின்ற தூதனை, கர்த்தர் அவன் கண்களைத் திறந்தபின்தான் அறியலானான். (எண். 22 : 31). எலிசாவைப் பிடிக்கவந்த சேனைகளைக் கண்டுநடுங்கின எலிசாவின் வேலைக்காரனுக்கு, அவன் கண்கள் திறக்கப்பட்ட பின்தான் எலிசாவைச் சுற்றிலும் இருந்த அக்கினிமயமான குதிரைகளையும் இரதங்களையும் கண்டு தைரியமடைந்தான். (2 ராஜா. 6 : 17). எம்மாவூருக்குப் போன சீஷருக்கு அவர்கள் கண்கள் திறக்கப்பட்ட பின்தான் இயேசுவை அறிந்தார்கள். (பரி. லூக். 24 : 31). ஆதலால், சுகவீனருக்கு சமீபமாயிருக்கும் மீட்பை அவர்கள் பார்க்கும்படியாக, தேவன் அவர்கள் கண்களைத் திறக்க வேண்டும். கண்களுக்கு கலிக்கம் அவசியம். (வெளி 3 : 18).

கடைசியாக, பிசாசுக்கு இடங்கொடுக்கலாகாது. அவன் மனிதருக்கு சத்துருவாயிருப்பவன். அவன் எப்போதும் மனிதருக்குத் தீங்கையே உண்டுபண்ணுவான். சுகவீனரில் சிலர் தங்களின் பிணிகளின் நிமித்தமாக பிசாசுகளுக்குப் பொருத்தனைகள் செய்து கொள்வார்கள்; பேயாடிகளின் வார்த்தைகளுக்குச் செவிகொடுப்பார்கள்; பேய்களையும் முனிகளையும் அம்மன்களையும் சாந்திபண்ணப் போவார்கள். இருந்து இருந்து இதைத்தானா செய்கிறது? சுகவீனரே! சற்றே யோசிக்கவேண்டும். ஆத்திரமாய்

ஒன்றையும் செய்யலாகா. மனம்போன போக்கின் படி போகவேண்டாம். ஐயோ! இதனாலே பேய் களுக்கு அடிமையாய்ப் போகும்படி நேரிடுமே. என்னை விழுந்து பணிந்துகொண்டால், இவைகளை யெல்லாம் தருவேன் என்று பிசாசு சொல்லுவான். அப்பொழுது, "அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒரு வருக்கே ஆராதனை செய்வாயாக" என்று எழுதி யிருக்கிறதே என்று சொல்லவேண்டும். (பரி. மத். 4 : 10; உபா. 6 : 13). பிசாசை வணங்குவது நல்லதோ? ஒரு மனிதனைப் பிசாசு பிடித்துக்கொண்டால், நமது நாட்டிலே அவனைச் செருப்பாலடிக்கிறார்களே. பிசாசு கோபப்படாதா? "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" என்று எழுதியிருக்கிறதே. (பரி. யாக். 4 : 7).

வழியிலே சாத்தானும்—தனது
வலைகளை விரித்தாலும் பயம்வேண்டாம்
கையிலே வேதாகமம்—என்னும்
கருக்கான பட்டயம் உனக்கும் உண்டே.

மானிடரே, கேளும்!—மிக்க
மகத்துவ சங்கதி உரைத்திடுவேன். (நொண்டிச் சிந்து.)

பிசாசுகளுக்குக் கொஞ்சமும் பயப்படாமல் எதிர்த்து நின்று துரத்தவேண்டும். அப்படித் துரத்து பவனே உண்மையான போர்வீரன். தேசத்திலே கிறிஸ்தவர்கள் அதிகப்படவே, வெளியரங்கமான

கோஷ்டத்துடன் பேய் பிடித்தவர்கள் அதிகம் கிடையாது என்று சொல்லலாம். 'இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்?' ஆனாலும் உள்ளான போராட்டம் அதிகம் உண்டு. பிசாசின் தந்திரங்கள் அதிகம். அதற்கென்று தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்வது அவசியம். (எபேசியர் 6: 10—18 பார்க்க). மேலும், சாத்தான் ஒளியின் வேஷத்தைத் தரித்துக்கொண்டு மனுஷரை ஏமாற்றப் பார்ப்பான். எச்சரிக்கை!

இடுக்கமாம் பாதைதனில்—நீங்கள்
நடப்பது அவசியம், கண்டிடுவீர்.
விசாலமாம் பாதைதனில்—ஐயோ,
நடப்பவர் அனந்தம் அனந்தம்பேரே

—மானிடரே கேளும்!

பாவத்தின் பாரமதால்—இளைத்த
பாவியே என்னிடம் வருவாய் என்றார்
ஆறுதல் அவரிடமே—அன்றி
வேறிடம் கிடையாது, விசுவாசி

—மானிடரே கேளும்!

7. அதிகாரம்.

கிறிஸ்து மாருதவர்.

"இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாருதவராயிருக்கிருர்." (எபி. 13 : 8). கிறிஸ்துவின் மாருத தன்மையை பற்றிய சந்தேகம் ஒன்றுமே இல்லை. அது மனிதரின் சந்தோஷத்திற்கும் சமாதானத்திற்கும் ஆதாரமாயிருக்கவேண்டியது. அவர் இவ்வுலகில் மனித ரூபமாய் இருக்கும்போது என்னென்ன செய்தாரோ, அவைகளை இன்னுமே செய்து கொண்டிருக்கிருர். இது அவரது திவ்ய தன்மைக்கு ஏற்றது. சுகவீனர் இதிலே நம்பிக்கை வைக்கவேண்டியது. அந்தக் காலத்திலேயும் அநேக வியாதியஸ்தர் அவரிடம் வந்து சுகமடைந்த போதிலும், அதிகமான பேர் விசுவாசித்து வரவில்லை. இப்போதும் அநேகர் அப்படித்தான் இருப்பாரகள் என்பதற்குச் சந்தேகமில்லை. காணுமல் விசுவாசிப்பதில் ஒரு பாக்கியமிருக்கிறது என்று அறிந்துகொள்ளலாம். விசுவாசம் பலமாகும்; பெரிய நன்மைகளுக்குக் காரணமுமாகும். அவர் கடைசியில் " இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்ருர்." (பரி. மத். 28 : 20). இதற்கு அவருடையவர்களே சாக்ஷிகளாவார்கள்.

ஆனல், மனிதர் மாறவேண்டியது அவசியம். அவர்களின் மனமாறுதல் மீட்பரின் இரக்கத்தைக்

கொண்டுவராமலிருக்காது. மனம் திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகும். சுகமாயிருக்கிறேனென்று எண்ணுகிறவன், மனம் மாறமாட்டான். சுகமுள்ளவனுக்கு வைத்தியனும் தேவை இல்லை. சுகமில்லாதிருந்தும் தான் சுகமாயிருக்கிறதாக எண்ணுபவன், குருடனுயிருந்தும் தான் குருடனல்ல என்று சாதிப்பவனுக்குச் சமானமானவன். அது மோசமான நிலைமை. அதற்கு மருந்து கிடையாது.

"என் பிதா இதுவரைக்கும் கிரியை செய்துவருகிறார்; நானும் கிரியை செய்து வருகிறேன்" (பரி. யோ. 5: 17) என்று நமது அருமை ரட்சகர் ஒரு சமயத்தில் சொன்னார். உலகத்திற்குப் பிரமாணங்களை ஏற்படுத்தியதுமன்னில், அவர் இன்னும் கிரியை செய்து வருகிறார். இது மனிதருக்கு மிகுந்த ஆறுதலைத் தரக்கூடியது. ஜீவாதிபதியானவர் ஆவிக்குரிய ஜீவனையும் சரீரத்துக்குரிய ஜீவனையும் காத்துப் பராமரிக்கிறவர். மனிதருடைய சுகத்தையும் பராமரிக்கிறவர் அவரே.

கிறிஸ்துநாதர் சிலவேளைகளில் தாமதமாயிருப்பதுண்டு. அவர் இவ்விதம் தாமதமாயிருப்பதை, மனதில்லாதிருக்கிறாரென்றெண்ணி அவிசுவாசப்படலாகாது. அவருடைய வேளை இன்னும் வராதிருக்கலாம் ஆனால் தருணத்திற்கு அவர் பிந்தமாட்டார். சீஷர்கள் கடலில் புசலினால் அதிக வருத்தமடைந்

திருந்தார்களே, அது அவருக்குத் தெரியாத காரிய மல்ல உடனே அவர்களிடத்திற்குப் போகவும் அவராலே முடியும்; என்றாலும் நான்காம் சாமத்தில் வருவதே அவருடைய வேளையாயிருந்தது. பின்னும், அவர் நேசித்தவன் வியாதியாயிருந்தான். மார்த்தாளும் மரியாளும் தங்களுடைய ஆபத்திலே அவருக்கு ஆளனுப்பினார்கள். என்றாலும் அவர் உடனே போகவில்லை. பின்னும் இரண்டு நாள் அவர் தாமதித்தார். ஏனென்றால் போகவேண்டிய வேளை அவருக்குத் தெரியும். நம்முடைய வேளையானது அவருடைய வேளையாகமாட்டாது. அப்படி அவர் தாமதிப்பதும் தமக்காகவல்ல, நமக்காகவே அப்படிச் செய்கிறாரெனக் கண்டறிந்துகொள்ளலாம். ஆனதுபற்றி விடா முயற்சியையும் விசுவாசத்தையும் விட்டுவிடலாகாது. சிலபேர் ஜெபம்பண்ணிவிட்டு உத்தரவிற்காகக் காத்திருக்கிறதில்லை. ஒரு நாள் ஒரு யாசகன் காலையிலே யாசக அன்னத்திற்காகப் புறப்பட்டான். அவன் முதலில் ஒரு வீட்டுக்குப் போவான்; அங்கே ஒரு சத்தம் போட்டுவிட்டு, உடனே அடுத்த வீட்டுக்குப் போய் விடுவான். பிறகு அடுத்த வீட்டிற்குப் போய் அன்னங்கேட்பான்; அவர்கள் ஏதாவது கொடுக்க எத்தனிக்குமுன் அங்கிருந்து புறப்பட்டு விடுவான். பின்பு இன்னொரு வீட்டுக்குப் போவான்; அந்த வீட்டிலுள்ளவர்கள் ஏதாவது கொண்டுவந்து அவனைத் தேடினால், அவன் அங்கே காணப்படமாட்டான். இவ்விதமாக அவன் வீடுகள்தோறும் மத்தியானமட்டும் அலைந்தும் யாதொன்றும் கிடைக்கவில்லையாம். அந்த ஆத்

திரக்காரனுக்கு ஒன்றுங்கிடையாதது ஆச்சரியமல்ல. பிறகு அவன் அந்த ஊரின் அருகேயிருந்த ஒரு ஆற்றின் ஓரத்தில் உட்கார்ந்து, அந்த ஊராரைப் பழித்துப் பேசத் தொடங்கினன். அவ்வழியாய்ச் சென்ற ஒருவன்: என்னுடனே வா. நான் உனக்குச் சோறு கொடுக்கிறேன் என்றான். அவன் பின்னாலே சிறிது தூரம்போய் திரும்பி வந்துவிட்டான். யாது காரணமோ! இதையெல்லாம் பார்த்துக்கொண்டு அவ்வாற்றிலே ஸ்நானம் செய்துகொண்டிருந்த ஒருவன்: என்னிடத்திலே சாதமிருக்கிறது, நான் சாப்பிட்டுவிட்டு உனக்குக் கொஞ்சம் தருகிறேன், நீ சற்று அப்பாலே போய் காத்திரு என்றான். அப்போது அந்த யாசகன்: ஐயாவே, நேரஞ் செல்லுமோ? என்று கேட்கவே, அவனுக்குக் அதிகக் கோபம் வந்து, சரியான உதை உதைத்து, அவனுக்குப் புத்தி கற்பித்த பிறகு கொஞ்சம் போஜனமுங் கொடுத்தானும். யாசகரும் யாசகம் எடுக்கப் பாடம்படிக்க வேண்டுந்தான். பின்னே என்ன? உதைதான். பெரியோரிடத்தில் கேட்டுவிட்டுப் போய்விடுவது குற்றம். அவர்களைத் தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவர்களும், விதைக்காத இடத்தில் அறுக்கிறவர்களுமான கடினமான மனுஷர் என்று சொல்லத்தானே! இரக்கத்தில் ஐசுவரியமுள்ள கடவுளிடத்திலும் கேட்டுவிட்டுப் போய்விடுதல் பெரிய குற்றமேயாகும். சகரியா என்னும் பேர்கொண்ட ஆசாரிய னொருவன் இருந்தான். அவன் பிள்ளைக்காக ஜெபஞ்செய்திருந்தான் என்று துலங்குகின்றது. காலஞ்சென்றபின் கர்த்தருடைய தூதன் அவனை

நோக்கி: சகரியாவே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது, உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள் என்று சொன்னபோது, சகரியா அதை நம்பவில்லை. கேட்டுவிட்டுப் போய் விடப் பார்த்தனரோ! காலஞ்சென்றாலென்ன! ஆபிரகாமும் சாராளும் முதிர் வயதிலே தேவ வாக்கின்படி ஒரு குமாரனைப் பெற்றதை, ஆசாரியனுயிருந்த சகரியா அறியவில்லையோ? இதோ, சகரியா உடனே தண்டனை அடைந்தான்; அந்தக் காரியங்கள் சம்பவிக்கும் நாள்மட்டும் பேசக்கூடாமல் ஊமையனுயிருந்தான் என்று வாசிக்கின்றோம். ஆகச்சே, முன் நடந்ததே பின் நடக்கும் என அறியலாவதாக. கிறிஸ்து மாறாதவர். பின்னும் பிதாவானவர் தமது ஆதீனத்தில் வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல" என்று சொல்லப்பட்டிருக்கிறது. (அப். 1 : 7).

ஆனபோதிலும், தம்மை நம்பினவர்கள் காத்திருப்பதால், சோர்ந்துபோக அவர் அவர்களை விடுகிறதில்லை. "ஆவியும், நான் உண்டுபண்ணின ஆத்துமாக்களும், என் முகத்திற்கு முன்பாகச் சோர்ந்து போகுமே" என்பார். (ஏசா. 57 : 16). மேலும் "சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார்." (ஏசா. 40 : 29). ஆதலால் "கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு." (சங். 37 : 7).

பூவுலகில் உள்ளவைகள் யாவும் மாறுந்தன்மையுடையது, பெலன் பெலவீனமாகவும், இன்பம்

துன்பமாகவும், சுகம் வியாதியாகவும், ஜீவன் மரண மாகவும் மாறிப்போகும். இஷ்டரும், பெற்ருேரும், பந்துக்களும் மாறிப்போவார்கள். சகலமும் மாறி ணுலும், ஒருபோதும் மாருதவர் ஒரே ஒருவர் தான் உண்டு. "நீரோ மாருதவராக இருக்கிறீர்." (சங். 102: 27). அவர் மாருத அன்பும், வற்ருத கிருபையும் நிறைந்தவர். அவரை எவருமே மாற்ற முடியாது. அவருடைய கையைத் தடுக்கக்கூடியவன் ஒருவனுமில்லை. அவர் துன்பத்தை இன்பமாகவும், துக்கத்தை ஆறுதலாகவும், வியாதியை லாபமாகவும் மரணத்தை ஜெயமாகவும் மாற்றுகிறவர். அவரைப் பிரியப்படுத்துவது மட்டும் நமதுமுழுக் கவலையா யிருக்கவேண்டும். அப்படியிருக்குமாகில், நாம் பிழைத் திருந்தாலும் மரித்துப்போனுலும் நன்ருயிருப்போம் என்பது நிச்சயம். அவர் இம்மையிலும் மறுமை யிலும் நமக்கு நன்மைசெய்வதை விட்டு மாறமாட் டார். அவர் யார்? அவருடைய பெயர் என்ன? அவர்தான் இயேசுகிறிஸ்து.

மாருத வாசா மகிமையின் ராஜா!
சோராதே வந்தேன் சுயமதி விட்டேன்.
தீராத வாஞ்சை தினமெந்தனின் மேலே
ஆருத நேசா அடியேனைக் காவா.

8. அதிகாரம்.

பாவம்—நோயின் முக்கிய காரணம்.

ஆதிமனுடர் ஜீவவிருக்ஷத்தின் கனிகளையே புசித்துக்கொண்டிருந்தால், அவர்களுக்குச் சாவில்லை. அவர்கள் பிரமாணத்தை மீறி, நன்மை தீமை அறியத் தக்க விருக்ஷத்தின் கனியைப் புசிக்கவே, சாவு உலகத்தில் வந்தது. ஏனெனில் "நீ அதைப் புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்" என்று தேவன் சொல்லியிருந்தார். பாவஞ்செய்தபின்பு "நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்" என்றார். ஆகவே பாவத்தினாலே மரணம் வந்தது. வியாதி துன்பம் முதலான சகல வருத்தங்களும் சாவுக்கு முன்னோடிகளே. அதாவது பாவத்தின் சம்பளம் வியாதி, துன்பம், மரணம் என்பவைகளாகும்.

மேலும், ஆதாம் பாவஞ்செய்தது முதல், அவன் சந்ததியை ஜென்மப் பாவம் ஆண்டுகொண்டது. "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்று சொல்லப்பட்டுளது. (சங். 51 : 5). அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத் தக்கவன் யார்? விரை ஒன்றுபோட சுரை ஒன்று முளைக்குமா? இவைகள் இயல்பு பிரமாணத்திற்கு முற்றும் விரோதமாச்சே. ஆகவே, மரணமானது ஆதாமின் மீறு

தலுக்கொப்பாய் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டு கொண்டது என்று காண்கிறோம். இதில் பேச்சு ஒன்றுமில்லை. பாவத்தினால் தேவகோபமும் சாபமும் அவன் சந்ததிக்கும் வந்துவிட்டது. ஆதலால், பின்னடியாருக்கு வரும் வியாதியும் அந்த சாபந்தான். அல்லாமலும், நமது அநுபவத்தினாலே 'உடன் பிறந்தே கொல்லும், வியாதி' என்று அறிகின்றோம்.

ஜென்ம பாவத்தின் பலாபலன் இப்படியிருக்க, மேலுக்குமேல் செய்யப்படுகின்ற கர்மப் பாவங்களும், சரீரத்திற்கு தீங்குகளைக் கொண்டுவராமலிருக்காது என்று பார்க்கலாம். இயேசுநாதர் பெதஸ்தாக்குளத்தின் மண்டபத்திலே சொஸ்தமாக்கின திமிர்வாதக்காரனை மறுபடி தேவாலயத்திலே கண்டு: "இதோ, நீ சொஸ்தமானாய், அதிகக் கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே," என்றார். (பரி. யோ. 5:14). இந்த சம்பவத்திலிருந்தும் நோயின் முக்கிய காரணம் பாவந்தான் என்று அறிந்துகொள்கின்றோம். தங்களுடைய பாவமான நடக்கையினாலே நேருக்கு நேரான நோய்கள் தோன்றவுங்கூடும். மற்ற விதமான நோய்களும் பாவத்தின் சாபத்தினாலே உண்டானவைகளே. மேலும் மனிதன் பாவத்தில் விழுந்ததினாலே சர்வசிருஷ்டியுங் கூட சாபத்துக்குள்ளாயினவே. ஆதலால், நோய்களின் மூலகாரணத்தை அறிந்துகொள்வது, நோயாளிகளுக்கு மிகுந்த பிரயோஜனத்தையே தரும் என்பது நிச்சயம்.

பின்னும் சங்கீதத்திலே, "நிர்மூடர் தங்கள் பாதகமார்க்கத்தாலும் தங்கள் அக்கிரமங்களாலும் நோய்கொண்டு ஒடுங்கிப்போகிறார்கள். அவர்கள் ஆத்துமா சகல போஜனத்தையும் அரோசிக்கிறது, அவர்கள் மரணவாசல்கள் பரியந்தம் சமீபிக்கிறார்கள்" (சங். 107 : 17-18) என்றும், "உமது கோபத்தினால் என் மாம்சத்தில் ஆரோக்கியமில்லை; என் பாவத்தினால் என் எலும்புகளில் சவுக்கியமில்லை. என் அக்கிரமங்கள் என் தலைக்கு மேலாகப் பெருகிற்று, அவைகள் பாரச்சுமையைப்போல என்னால் தாங்கக்கூடாத பாரமாயிற்று. என் மதிகேட்டினிமித்தம் என் புண்கள் அழுகி நாற்றமெடுத்தது. நான் வேதனைப்பட்டு ஒடுங்கினேன்; நாள் முழுதும் துக்கப்பட்டுத் திரிகிறேன். என் குடல்கள் எரிபந்தமாய் எரிகிறது; என் மாம்சத்தில் ஆரோக்கியம் இல்லை. நான் பெலனற்றுப்போய், மிகவும் நொறுக்கப்பட்டேன்; என் இருதயத்தின் கொந்தளிப்பினால் கதறுகிறேன். ஆண்டவரே, என் ஏங்கலெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது, என் தவிப்பு உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் உள்ளம் குழம்பி அலைகிறது; என் பெலன் என்னைவிட்டு விலகி, என் கண்களின் ஒளிமுதலாய் இல்லாமற்போயிற்று" என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. நோயின் முக்கிய காரணம் பாவந்தான் என்று முந்திய தொகுதிகளில் பார்த்தோமே. இதில் எடுத்துக்கூறிய வசனங்கள், மனுஷருடைய அனுபவத்தினால் கிடைத்து அதே சத்தியமாக விளங்குகின்றது.

பின்னும், பெருமைபானது ஒரு பெரிய கேடு. பெருமைகொள்ள மனுஷருக்கு என்ன நியாயமுண்டு. ஏரோது ராஜா பெருமைகொண்டபோது, ஒரு தேவ தூதனல் அடிக்கப்பட்டு, புழுப்புழுத்து நிர்ப்பந்த மாய்ச் செத்தான். பலபேர் தங்களிடத்தில் பெருமை குடிகொண்டிருப்பதை முதலாய் தாங்கள் கண்டறி யக் கூடாதவர்களாயிருப்பார்கள். பாம்பு மறைந்து கிடந்தாலும் பாம்புதான். சொல்லப்போனல், அப் படி மறைந்து கிடப்பதுதான் அதிக மோசம். உள் ளத்தில் மறைந்துகிடக்கும் பாவமும் வியாதியைக் கொண்டுவரும் என்பது திண்ணமே. பின்னும் பார்க் கப்போனல், அவிசுவாசமாகிய பாவமும், தன்னயமா கிய பாவமும், சோம்பலாகிய பாவமும், பொருளாசை யாகிய பாவமும், கெட்ட இச்சையாகிய பாவமும், மனக்கவலை என்ற பாவமும், பெருந்தீனி, குடிவெறி முதலான பாவங்களும், பொறாமை, பகை, வஞ்சகம், சூது முதலான பாவங்களும் பலவித பிணிகளைக் கொண்டுவரும் என அறிந்து கொள்ளலாம். பிதாக்க ளுடைய பாவங்களினிமித்தமும் முன்னோர்களுடைய குற்றங்களினிமித்தமும் வியாதிகள் வரக்கூடும். "என் னைப் பகைக்கிறவர்களைக் குறித்து பிதாக்களுடைய அக்கிரமத்தை பிள்ளைகளிடத்தில் மூன்றும் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவரா யிருக்கிறேன்" என்று இருக்கிறது. பின்னும், தேவனுடைய ராஜ யத்துக்கடுத்த வேலைகளை அவமாக்குகிறவர்களும், தேவ ஆவியைப் பெற்ற ஊழியரை அவமதிக் கிறவர்களும், தேவ நாமத்தை வீணிலே வழங்

குகிறவர்களும், சடுதியான வியாதியையாவது வேறே எந்தத் தண்டனையையாவது அடைவார்கள். உசியா ராஜா தூபங்காட்டப்போய் உடனே குஷ்ட ரோகத்தை அடைந்தான். தேவனுடைய மனிதனின் வார்த்தையை அவமதித்த யெரோபெயாம் ராஜா தன் கையை அவனுக்கு விரோதமாய் நீட்டினபோது, அந்தக் கை உடனே மரத்துப்போயிற்று. பாவங்களைப்பற்றி விஸ்தாரமாய் அறிந்துகொள்வது அநேகம்பேருக்கு இஷ்டமாயிராவிட்டாலும், அவைகளைப்பற்றி அறிந்துகொள்வதில் யாதொரு நஷ்டமும் இல்லையென்றும், அப்படி அறிந்துகொள்வது நன்மைகளையே பயக்கும் என்றும் கண்டுபிடிக்கலாம். பாவங்களின் விவரங்களையும் அவைகளால் நேரிடும் தண்டனைகளையும் ஆராய்ந்துபார்த்தலாகிய முயற்சியே, அப்பாவங்களை நீக்கிவிட ஏதுவுண்டாக்குமே. அப்படி ஆராய்ந்து பார்க்க இஷ்டமில்லாதிருப்பதும், பாவத்தின் தன்மையே யாகும். ஆனாலும் பாவமாகிய காரணமின்றி வருகின்ற நோய்களும் உள. மற்றக் காரணங்களினிமித்தம் நோய்கள் வருவதைப்பற்றி, பின்வரும் அத்தியாயங்களில் விஸ்தாரமாய் கூறியுள.

“சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா?” இந்தக் கேள்வியானது முதலில் அனாவசியமாகத் தோன்றலாம்; ஏனெனில் சொஸ்தமடைய விரும்பாதவன் எவன்? ஆனால் இந்தக்கேள்வியில் ஒரு விசேஷம் இருக்கின்றது. சொஸ்தமடைய விரும்புகிறவர்களில் அநேகர், தேவனுடைய வழிவகைகள் எந்த

விதமாயிருக்கின்றனவோ அந்த விதமாக சொஸ்தமடைய விரும்பாமல், தங்களுடைய சுய இஷ்டத்தின் முறைப்படி சொஸ்தமடைய விரும்புவார்கள். அந்தப் படியேயும் அநேகர் சரீர சுகமடையலாம். ஆனால் அன்னோருக்கு ஆத்துமசுகம் கிடையாமற் போய் விடுமே. இது மகா பெரிய நஷ்டம்! நோய்களுக்கு மூலகாரணமான பாவம் முதலில் தீராவிடின், ஆத்துமா மிகுதியும் நோய்கொண்டு ஒடுங்கிப்போகும். மேலும் பணங்களை மிகுதியும் செலவழித்தும், சரீர சுகம் கிடையாமற்போனால் என்ன செய்வார்கள்? தீராத வியாதிகளுக்கும் கடைசிக்கால வியாதிகளுக்கும் வேண்டிய பொறுமை ஆறுதல் முதலானவைகள் எங்கே கிடைக்கும்? நல்ல சமயங்களையும் எச்சரிப்புகளையும் போக்கடித்து இழந்து விட்டால் திரும்ப அவைகள் கிடைக்குமா? ஆத்தும சுகத்தைப் பெற்றவர்கள் சரீர வியாதியை அவ்வளவு பெரிதாகப் பாராட்டாமல், மனச்சந்தோஷம் உள்ளவர்களாய் இருப்பார்கள். இது ஆத்தும சுகத்தைப் பெற்றவர்களுக்குமட்டும் தெரியும்; மற்றவர்களுக்கோ அது தெரியாது. வியாதியாயிருந்தாலும் சந்தோஷம் உடையவர்களாயிருக்கின்ற அந்த நிலமை எங்கே கிடைக்கும்? எப்போது கிடைக்கும்? எதினால் கிடைக்கும்? அதுதான் தேவனுடைய வழி. தேவனுடைய வழி நல்லதல்லவோ! அதைக் கைவிடாதீர்.

வியாதிக்கு முக்கிய காரணமாகிய பாவம் நீங்கிடவே, சரீர சுகமும் உண்டாகிவிடும். “அவர் உன்

அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களை யெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களி னாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது.'' (சங். 103 : 3-5). மேலும் ஆவியினாலே ஜீவிக்கிறவர் களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை. சில பாவங்களைமட்டும் விட்டுவிடுதல் ஆவியினாலே ஜீவித்தல் அல்ல. அது குணப்படுதலும் ஆகாது. எல்லாப் பாவங்களைக் குறித்தும் உத்தம மனஸ்தாபத்துடன் கண்ணீர் விடு தலும், பாவ அறிக்கை செய்து பாவமன்னிப்பு அடை தலும், உத்தம விசுவாசத்துடன் மனந்திரும்புதலும், பரிசுத்த ஆவியைப் பெறுதலும் அத்தியாவசியம். இதற்கு ஆதாரமாக வேத வாசிப்பு, ஜெபம் ஆகிய இரண்டும் வேண்டும். மதுவிலக்கு சங்கத்தார், அந்த ஒரே பாவத்தைமட்டும் ஒழித்துவிடப் பிரயாசப்பட் டால் சித்திபெறமாட்டார்கள். ஒருவனிடத்தில் அநேக பிசாசுகள் வாசஞ்செய்யும்போது, அதில் ஒரு பிசாசைமட்டும் துரத்துவது எப்படி? அதற்கு வேத ஆதாரம் என்ன? அல்லது அது அனுபவத்தில் சாத்தியப்படுகிறதா? இயேசுரட்சகர் முழு இரு தயத்தையும் கேட்கிறார். மற்றப்படி தேவனோடே ஐக்யப்படுவது கூடாத காரியம்; பேரின்பத்தையும் அடையமாட்டார்கள்.

ஜெப ஜீவியம்.

தேவனை அறிவதோடு தேவனையே நேசித்து,
தேவனோடு ஐக்யமாகி தேவனோடு சஞ்சரித்து,
தேவனோடு சம்பாஷித்து தேவனோடே உறவாடி,
தேவசித்தம் நிறைவேற்றி தேவனைத் துதித்தலேயாம்.

குறிப்பு :—'இன்னும் என்ன செய்யானையா?' என்கிற புஸ்தகத்தில், கவிகள் 34—37 பார்க்க. (Edited by the same Author.)

---

9. அதிகாரம்.

நோயின் அந்தரங்கம்.

"நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளு கிறேன்." (சங். 119 : 71).

"கர்த்தாவே, உமது நியாயத்தீர்ப்புகள் நீதியுள்ளதென்றும், உண்மையின்படி என்னை உபத்திரவப்படுத்தினீரென்றும் அறிவேன்." (சங். 119 : 75)

"நான் உபத்திரவப்படுமுன் வழிதப்பி நடந்தேன்; இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன்." (சங். 119 : 67).

இது மெய்விசுவாசிகள் கற்றறிந்த சிறந்த சத்தியம். "உபத்திரவம் நல்லது" என்பதே அந்த சத்தியமாம். தங்கள் அனுபவத்தில் அதைக் கண்டறிந்தவர்களே இந்த இரகசியத்தை வெளியிடக்கூடும்.

தங்களுக்கு அதிகத்திரவியம் கிடைப்பது நல்லதென்று உலகத்திலே சொல்வதுண்டு. தங்களுக்கு அதிகக் கீர்த்தி பிரஸ்தாபம் உண்டாவது நல்லதென்றும், தங்களுக்கு அதிக இனஜனம் இருப்பது நல்லதென்றும், தங்களுக்கு உயர்ந்தோருடைய சிநேகம் கிடைப்பது நல்லதென்றும், தங்களுக்கு அதிகக் கல்வி கிடைப்பது நல்லதென்றும், தங்களுக்கு நல்ல செய்திகள் வருவது நல்லதென்றும், தங்களுக்கு நல்ல சுகம் இருப்பது நல்லதென்றும் உலகத்திலே

சொல்வது உண்டு. தங்களுக்கு உபத்திரவம், துன்பம், வியாதி உண்டாகிறது நல்லதென்று சொல்வார்களா? "நான் உபத்திரவப்பட்டது நல்லது" என்று, அதைக் கண்டறிந்தவர்கள்தான் சொல்லக்கூடும். ஆனால் உபத்திரவம் தன்னில்தானே நல்லதல்ல. உபத்திரவம் வரும்போது சங்கடமாய்த்தானிருக்கும். ஆகிலும், அதின் மெய்யான பயனைப் பார்க்குமிடத்து, அது நல்லதே.

ஒரு நாள் ஒரு சித்திரக்காரன், தான் அநேக நாட்களாகச் செய்துகொண்டிருந்த ஒரு பெரிய சித்திரப்படத்தை எடுத்து, தனது உயர்ந்த மேல்மெத்தையில் வைத்து, அதிலே திருத்தவேண்டியவைகள் ஏதாவதிருக்கிறதாவென்று பரிசோதனை செய்துகொண்டிருந்தான். அது வெகு அழகாயும் நேர்த்தியாயுமிருந்தது. அதைப் பார்த்தவர்களெல்லாரும் அதை அதிகமாய் வியந்து கொண்டார்கள். ஆகவே அவனும் அவன் மனைவியும் அதினாலே தங்களுக்கு அதிகப்பணமும் நல்ல பேரும் கிடைக்குமென எதிர்பார்த்திருந்தார்கள். இங்ஙனமிருக்க, மேல்மெத்தையிலே படத்தை பரிசோதனை செய்யுங்கால் மனதிலே ஒரு எண்ணம் உதித்தது. படத்தை சற்று தூரம் இருந்து பார்வையிட்டால், அதிலேயுள்ள குற்றம் குறைகள் தெளிவாகத் தெரியக்கூடும் என யோசிக்கலானான். அந்தப்படி படத்தைப் பார்த்துக்கொண்டே முன்னுக்கும் பின்னுக்குமாக நடந்துகொண்டிருந்தவன், மெத்தையின் கடைசிவரை தனக்

குத் தெரியாமலே வந்து விட்டான். இன்னும் ஒரு அடிமட்டும் பின்னாலே வைத்திருந்தால், மெத்தையி லிருந்து கீழே தவறிவிழுந்து செத்துப்போயிருப் பான். அந்த மெத்தைக்கு சுற்றுசுவர் ஒன்றுமே கிடையாது. இச்சமயத்தில் அங்கேயிருந்த கை யாள் தனது அருகிலிருந்த சாயப்புட்டியை சமயோசி தமாய்ப் படத்தின்மேல் எறியவே, சித்திரக்காரனும் பின்னுக்குக் காலடி வைப்பதை நிறுத்தி, அவசரமாய் முன்னாலே அடிவைத்து, படம் கெட்டுப்போனதே என்று முன்பக்கம் ஓட உயிர்தப்பிப் பிழைத்தான். சித்திரக்காரன் நடந்த சம்பவத்தைக் கேட்டறிந்த வுடனே: என் படம் கெட்டுப்போனது எனக்கு நல்லது; அதினாலே நான் உயிர்தப்பிப் பிழைத் தேனே என்று சொல்லி, படத்தைக் கெடுத்துப் போட்ட கையாளுக்கும் பெரிய வெகுமதி கொடுத்து, அவனை அதிகமாய் நேசித்தானும். உயிர் இருந்தால் வேறே படம் செய்துகொள்ளலாம்.

நெடுநாளாக வியாதிப் படுக்கையிலிருந்த ஒருவன், அந்த வியாதியினாலே எச்சரிப்படைந்து மனந்திரும் பிக் குணப்பட்டு, ஆத்தும ஜீவனை அடைந்தானாகில், தான் வியாதிப்பட்டது நல்லது என்று சொல்வானல் லவா? சந்தேகமின்றி தான் வியாதியாயிருந்தது நல்லதென்று சொல்லி, கடவுளுக்கு நன்றிசெலுத்து வான். சுகமானது கெட்டுப்போவது மனிதர் தங்கள் ஆத்தும ஜீவனை இழந்துவிடாதபடிக்கு, சர்வஞான கடவுள் ஏற்படுத்திய எச்சரிப்புத்தானே. ஆத்ம

சுகங் கிடைப்பதற்கு சரீர சுகத்தை இழந்தாலென்ன? அது பெரிய காரியமா? அல்லவே. பெரிய காரியங்களுக்குச் சிறிய காரியங்கள் இடங்கொடுக்கவேண்டும். ஆத்தும வாழ்வுக்கு சரீர வாழ்வு இடங்கொடுக்க வேண்டும். ஆத்தும சுகத்திற்கு சரீர சுகம் இடங்கொடுக்கவேண்டும். மேலும், உலக சொத்துக்காகவும் தேசத்திற்காகவும் தங்கள் உயிரைக் கொடுக்கிறார்களே, என்றைக்கானாலும் ஓர் நாளிலே சாகவேண்டியதுதானே என்று சொல்லி அப்படிச் செய்கிறார்களே. அப்படியானால், உலக முழுமைக்கும் மேலானதும், நித்திய காலமாய் நிலைக்கக் கூடியதும், தேவனுடைய ராஜ்யத்திற்கடுத்ததுமான ஆத்துமாவுக்காக அப்படிச் செய்யவேண்டியது எத்தனை அதிகம்!

இந்தப் பாவ உலகத்திலே தீங்கு என்று சொல்லப்பட்டதையும் நன்மையாக்கிக் கொள்ளலாம் என்பதே இச்சீவியத்தின் ஒரே ஒரு நம்பிக்கை. வேறே நம்பிக்கை இருந்தால் யாராவது சொல்லட்டும். வேறே மார்க்கங்களில் இதைப்பற்றி ஏதாவது கூறப்பட்டிருக்கின்றதா? இல்லையே. அப்படியானால், அந்த மார்க்கங்கள் இருப்பதினால் மனிதருக்குப் பிரயோஜனம் யாது? அவைகளெல்லாம் மனிதரைக் கெடுத்துப்போடும்படியாக, சாத்தானால் தந்திரமாய் ஏற்படுத்தப்பட்ட கண்ணிகளேயன்றி வேறல்ல.

இப்படியாகத் தீங்கு என்பதையே தனக்கு நன்மையாக்குகின்ற மெய்யான கிறிஸ்தவனை, உலகத்

திலே சேதப்படுத்துவது ஒன்றுமே இல்லை. உபத்திரவமோ, வியாகுலமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோ, பட்டயமோ, வல்லமையோ, துரைத்தனமோ, நிகழ்காரியமோ, வருங்காரியமோ, தாழ்வோ, மோசடியோ, தந்திரமோ, மந்திரமோ, முனியோ, பேயோ, உலகமோ, ஆசையோ, வியாதியோ, மரணமோ—இவை ஒன்றுமே சேதப்படுத்தாது. உலகத்திலே இதைவிட மேலான ஜீவியம் யாது? "கர்த்தர் நம்மைப் பிரகாசிப்பிக்கிற தேவனாயிருக்கிறார்." (சங். 118 : 27). தேவனுடைய மகத்தான இந்தக் கிருபையே மனுஷருக்குப் போதுமானது. கர்த்தருடைய நாமத்திற்கே ஸ்தோத்திரம்.

பாவமில்லாத உலக இன்பங்களையும் சரிவர நன்மையாக்கிக் கொண்டவர்கள் உலகத்திலே கிடையாது; சரீர சுகத்தையும் நன்மையாக்கிக் கொண்டவர்கள் இல்லை. உலக இன்பம் தன்னில்தானே பாவமுள்ளதல்ல. உலக இன்பமும், சரீர சுகமும், ஆயுசும், உலக வாழ்வும் சொற்ப உபயோகமுள்ளவை; அவைகள் நிறைவுள்ளவைகளுமல்ல, நிலையானவைகளுமல்ல. அவைகள் வர வரக் குறைந்துபோகும் தன்மையுடையன. ஒரு ரோஜா புஷ்பத்தை முதலில் முகர்ந்து பார்க்கும்போது அது அதிக வாசனையுடையதாய்த் தோன்றும். மறுபடியும் அதை முகர்ந்து பார்க்க, வாசனை சற்று குறைவாயிருப்பதாகத் தோன்றும். திரும்பத் திரும்ப அதையெடுத்து முகர, அதன் வாசனை வரவர மிகவும் குறைவதாகத் தோன்றும்.

இப்படியேதான் உலக இன்பங்களெல்லாம் இருக்கும். கடவுள் அவைகளை இப்படியே அமைத்திருக்கின்றார். ஞானமுள்ள தேவன் அவைகளுக்கு ஒரு எல்லையை ஏற்படுத்தி, அதின் மூலமாய் நிலையானதும் மேலானதுமான பரம இன்பங்களுக்கு வழி காட்டுகின்றார். பரம நன்மைகள் முதலில் நிழலாட்டமாய்த் தூரத்திலே தெரியும். இருக்க இருக்க அவைகள் தெளிவாகத் தெரியும். இன்னம் அதிலே செல்ல செல்ல, இன்பம் அதிகரிக்கும். இவ்வித பரம நன்மைகளுக்கு ஊற்றும் காரணருமாகிய கடவுளிடம் வழி நடத்தவே, உலக நன்மைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் உலகத்திற்குரியவர்கள் வழியை விட்டுப் போட்டு, இங்கேயே தங்கிவிடுகின்றனர். உலகமும், உலக இன்பமும், சரீர சுகமும் சதமென்று நினைத்து விடுகிறார்கள். "ஒரு வேளைப் போஜனத்திற்காகத் தன் ஜேஷ்ட புத்திர பாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப்போல சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. (எபி. 12:16). ஆகவே, உலக இன்பத்திலே சிக்குண்டவர்கள் நன்மையைத் தீமையாக்குகின்றனர். சரீர சுகத்தையும் தீமைக்கு ஏதுவாக உபயோகித்தால், அதிலும் பிரயோஜனமில்லை. ஆனால் சரீர சுகங்கெட்டு வியாதியாயிருப்பவர்களுக்கு மீட்பு அதிக சமீபமாயிருக்கின்றது. வியாதி அவர்களை எச்சரிக்கிறது. சிலுவையிலே உயர்த்தப்பட்ட நேச மீட்பர் அவர்களெல்லாரையும் தம்மண்டையிலே இழுத்துக்கொள்வாராக. ஆமென்.

உபத்திரவத்தின் மூலமாய் பரத்திற்கு எழுந்தருளிச் சென்ற இயேசுவைப்பார்த்து நடவுங்கள். அவர் மனிதருக்குச் சிறந்த முன்மாதிரி காட்டிச் சென்றார். அதினால் நமக்கு வேண்டிய தைரியம் கிடைத்தது. நித்திய ஜீவனுக்குப் போகிற வழியானது, கொல்கதா மேட்டின் வழியாகவே செல்கின்றது. வேறே வழி இல்லை. மேலும் உபத்திரவத்தைத் தாங்கிக்கொள்ள, அவர் பலத்தைக் கொடுக்கிறார். உபத்திரவப்படுகிறவர்களுடைய பலத்திற்கு மிஞ்சின துன்பத்தை அவர் வரவிடுகிறவருமல்ல. ஆதலால் உபத்திரவத்திலே பொறுமையும், தைரியமும், முன்னோக்கிச் செல்லுதலும் அவசியமாயிருக்கிறது. இயேசுநாதர் தம்மைப் பிடித்துக்கொண்டு போகும்படி வந்தவர்களுக்கு எதிர்கொண்டு போனார்; அதினால் எதிரிகள் பின்னிட்டு விழுந்தார்களென்று வாசிக்கிறோம். அதுபோல உபத்திரவம் வரும்பொழுது முன்னேறிச் சென்றால், உபத்திரவம் பின்னிட்டுத் தாழ விழும். உபத்திரவம் வரும், ஆனால் அதின் கூர் ஒடிந்துபோம். மேலும், உபத்திரவமானது நாம் பரிசுத்தத்தில் பங்கு பெறும் பொருட்டாக நமது பிரயோஜனத்திற் கென்றே வருகிறது என்கிற நம்பிக்கை நமது மனதிற்குத் தகுந்த நங்கூரமாயிருக்கும். நாம் காற்றினால் அலசடிப்பட்டவர்களாயிருக்கமாட்டோம். மேலும், உபத்திரவத்தைக் கண்டதும் பயப்படுகிறவர்களுக்கு, அது அதிகக் கேட்டையே வருவிக்கும். அவர்கள் இவ்வுலகத்தின் மக்களாய்ப் போய்விடுவார்கள். மேலும் பயந்தவர்களுக்கு

எந்தச் சிறிய துன்பமும், பெரிய துன்பமாக மாறும். பின்னும், மோசேயின் பர்வத காட்சியில் முட்செடியில் அக்கினி பற்றியெரிந்தும், முட்செடி எரிந்து போகவில்லை. இந்த அதிசயக் காட்சியிலும் ஒரு இரகசியம் அடங்கியிருக்கின்றது. அக்கினிச் சூளையில் போடப்பட்ட மூவரையும் அக்கினி சேதப் படுத்தவில்லை. தேவசாயலான ஒருவர் அக்கினிச் சூளையில் அவர்களோடேகூட நின்றார். விசுவாசத்துடன் உபத்திரவப் படுகிறவர்களோடு தேவ மீட்பர் கூடவே இருக்கின்றனர். இதுவே போதுமானது. ஏழை வியாதியஸ்தனுக்கு வேறே என்ன வேண்டும்? உன் பாரத்தை அவரல்லவோ சுமக்கிறார். மேலும், சிலவேளை துன்பம் இல்லாதவர்களையும் சாத்தான், தாங்கள் துன்பப் படுவதாக எண்ணச் செய்வான். அதையும் நல்லதாக்க தீர்மானித்தால், சாத்தான் ஓடியே போய்விடுவான்.

கடைசியாக, உபத்திரவத்தின் மூலமாய் பரத்திற்குச் சென்ற இயேசு சுவாமியின் சமுகத்தில் துன்பமும் இல்லை, கண்ணீரும் இல்லை. துன்பத்தையே இன்பமாக்கின பாக்கியசாலிகளின் மேன்மையானது எவ்வளவு சிறப்புள்ளதாயிருக்கிறது. அவர்களுடைய வாழ்வே வாழ்வு. அவர்களுடைய சந்தோஷமே சந்தோஷம். அவர்களுடைய சந்தோஷத்தை அவர்களை விட்டு எடுத்துப்போட ஒன்றிற்குமே அதிகாரமில்லை. மெய்யான சந்தோஷத்தை மூடியிருந்த கசப்பாகிய துன்பத்தின் ஆழம், இவ்வளவுதான் என்று கண்ட

றிந்துவிட்டனரே. இனி அவர்கள் தாங்கள் விட்டு வந்த 'எகிப்துக்குத் திரும்ப' மாட்டார்கள். உபத்திரவத்தை நல்லதெனக் கண்டறிந்தவன் ஜெயமடைந்தவனே. ஜெயங்கொள்ளுகிறவனுக்கு மறைவான மன்னாவும், வெண்மையான குறிக்கல்லும், அந்தக் கல்லின் மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமமும் கிடைக்கும் (வெளி. 2 : 17).

குறிப்பு :—துன்பத்தைத் தாங்காதவன் ஜெயமடைந்தவன் அல்ல. கற்பாறை நிலம் வெயிலைத் தாங்காது. நல்ல நிலத்திற்கு வெயில் நல்லது. வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் வரும்போது தான், கற்பாறை நிலத்தைப்போன்றவர்கள் யாரென்று தெரியவரும். உபத்திரவத்தினாலும் துன்பத்தினாலும் அவர்கள் இடறலடைந்து போவார்கள். "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன்" (பரி. மாற். 4: 17-19).

கடலின் ஆழத்தில் கிடக்கின்ற முத்துகளை
கஷ்டங்களில்லாது காண்பதும் உண்டுமோ?
அக்கினிக் குகையிலே அறிவாய் வேதத்தை,
தக்கதாம் துன்பங்கள் மிக்கவே அறிவிக்கும்.
உபத்ரவ மூல்யமாய் உயர் சென்ற ஏசையன்
உன்னத மாதிரிதான் உனக்கும் உண்டுமோம்.
கொஞ்சம் குளிர்பனி கொஞ்சம் வெயிலனல்
அஞ்சேல் அதுசுகம், மிஞ்சிடா துன்பலம்.
விண்டல விதியைக் கண்டவர் அறிவர்,
துன்பத்தில் புகுந்தவர் நன்றெனக் கொள்வரே.

---

10. அதிகாரம்.

சோதனை—நோயின் மறு காரணம்.

பாவத்தைத் தள்ளிவிட்டவர்களுக்கு அதிலே சோதனைகள் நேரிடும். இது பாவ உலகத்தின் தன்மை. முன்னே தள்ளிவிட்ட பாவங்கள் முன்னிலும் அதிக வல்லமையாய்க் காணப்படும். பார்வோன் ராஜா இஸ்ரவேல் ஜனங்களை விட்டுவிட்டபோதிலும், திரும்பவும் அதிக மும்முரமாய் பின் தொடர்ந்தான் என்று பார்க்கிறோம். விட்டுவிட்ட பாவமும் அப்படித்தான் செய்யும். இந்தப் பாவசோதனையில் முழுவதுமாய் ஜெயம் பெறவேண்டும். பாவத்தைப் பற்றிய எண்ணம் அல்லது ஆசை மனதில் தோன்றினவுடனே, அந்நிமிஷமே அந்த எண்ணத்திலிருந்து மனதை, இரட்சகரின் உதவியைத்தேடி, மாற்றவேண்டும். ஆரம்பத்தைத் தடுத்தல் எப்போதும் இலேசு. கெட்ட சகவாசம், ஆகாத சம்பாஷனை, சோம்பல் முதலானவைகளையும் நீக்கவேண்டும். சோதனை கடினமாயிருந்தால் உபவாசத்தோடும் கண்ணீரோடும் ஜெபத்தோடும் இரட்சகரை விடாப்பிடியாய் பிடிக்கவேண்டும். பாவத்திற்கு இடங்கொடுத்து விட்டால், ஏதாவது துன்பம் அல்லது வியாதி வர இடமுண்டாகும். திரும்ப எழுந்திருக்கலாமென்றாலும், சேற்றில் விழுந்து விழுந்து எழுந்திருப்பது நல்லதா? இரட்சண்யத்தின் சந்தோஷமும் உற்சாகமும் திரும்ப

வருவது வெகு பிரயாசம். தாவீது ராஜா பாவத்தில் விழுந்த பின்பு, மனஸ்தாபப்பட்டு: "உமது ரட்சண்யத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்" என்று கெஞ்சினதாக நாம் பார்க்கிறோம் (சங். 51 : 12). சாதாரணமாயிருக்கும்போதும் "எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை ரட்சித்துக்கொள்ளும்" என்று கருத்துடன் ஜெபித்துக்கொண்டிருப்பது அவசியம்.

குறிப்பு:—சோதனை அடிக்கடி துன்பங்களுடன் வருவதால், நடக்கிற துன்பங்கள் யாவும் சோதனைகள் தான் என்று எண்ணிவிடலாகாது. அநேகர் தங்களுடைய தப்பிதங்களாலும், புத்தியீனங்களாலும், இயற்கைப் பிரமாணங்களை மீறுவதாலும், சுகாதார விதிகளை அனுசரிக்காததாலும், முன்னோர்களுடைய துன்மார்க்க நடக்கையாலும் துன்பங்களையும் நோய்களையும் அடைவார்கள். அவைகள் சோதனைகள் அல்ல. நன்றாய் கவனித்தால், அது அவரவருக்கே தெரிய வரும்.

சோதனைகளில் பலவிதம் உண்டு. அவரவர்களுடைய தன்மைக்கு ஏற்றபடி சோதனைகள் வரும். ஆவிக்குரிய ஜீவியம்செய்ய சாத்தியப்படுவது, தேவனுடைய சுத்த ஈவாக இருக்கிறதேயன்றி வேறல்ல. அதற்குரிய மகிமை தேவனுக்கே உரியது. மேலும் தாங்கள் ஆவிக்குரிய ஜீவியஞ்செய்வதால், தேவன்

தங்களுக்கு இன்னின்ன செய்யவேண்டியது அவருடைய கடமை என்று நினைத்துவிடுவதும் பெரும் பிசகு. முந்திப் பெற்றுக்கொண்டதும் தேவனுடைய ஈவு; பின்னுலே பெற்றுக்கொள்வதும் தேவனுடைய சுத்த ஈவே. இப்படியிருக்க, எவராவது ஆவிக்குரிய விஷயங்களில் பெருமைகொள்வதும், அவைகளைப்பற்றி மேன்மை பாராட்டுவதும் பெரிய தவறுதலாகும். இது அவசியம் திருத்தப்படவேண்டிய காரியம். சோதனையில்லாமலே இந்தப் பாடத்தைப் படித்துக்கொண்டாலென்ன? "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்," "என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" (பரி. மத். 11 : 29) என்று அருமை மீட்பர் சொன்னாரே. மற்றப்படி, சாத்தான் அவர்களைத் துன்பப் படுத்திப்போடுவான். ஆதலால், பரிசுத்தத்தின் அலங்காரமாகிய மனத்தாழ்மையை அணிந்துகொள்ள வேண்டும். தவறினால் சோதனைகள் வரும். என்றாலும், பொன்னைப் புடமிட்டால் பொன்னாகவே விளங்கும். அக்கினி அதைச் சேதப்படுத்துவதில்லை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். களிம்பு மட்டும் நீங்கும். ஆகிலும் கவனிக்கவேண்டிய இன்னொரு விஷயம் உண்டு. பொன்னானது உருக்கப்பட்டாலொழிய வேலைக்கு உதவாது. யோபு மிகுந்த உபத்திரவத்தை அனுபவித்து, தேகமுழுவதும் கொடிய பருக்களால் வாதிக்கப்பட்டும் உத்தமனாகவே விளங்கினது நமக்குத் தெரியும். பெரிய உத்தமனுக்குப் பெரிய சோதனை நேரிட்டு, உபத்திரவப் படுகிறவர்களுக்கு பொறுமை

யில் மிகச்சிறந்த மாதிரியானுன். மற்றப்படி அவனது பொறுமையாகிய வெளிச்சம் எப்படிப் பிரகாசிக்கக் கூடும்? சோதனையானது தனக்குப் பிரயோஜனம் உண்டாக்கவேண்டும்; அல்லது தான் கோரியபடி மற்றவர்களுக்குப் பிரயோஜனம் உண்டாக்கவேண்டும்.

விசுவாசம் பரீட்சிக்கப்படும் (பரி. யாக். 1 : 3). மற்றப்படி, விசுவாசம் இருப்பது எப்படி வெளியே வரும்? மற்றவர்களுக்கு அது எப்படித் தெரிய வரும்? தேவனைப் பிரியப்படுத்துவது எப்படி? தேவனை மகிமைப் படுத்துவது எப்படி? ஒரு மெத்தையின் கீழறையில் நெருப்புப் பற்றிக்கொண்டதென்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது மெத்தைமேல் நின்றசிறிய மகனைத் தகப்பன் பார்த்து: நீ கீழே குதித்துவிடு, நான் உன்னைப் பிடித்துக் கொள்ளுவேன் என்று சொன்னவுடனே, மகன் நம்பிக்கையோடு கீழே குதித்துவிட்டால், அது தகப்பனுக்கு எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுக்கும்! இப்படியே பரம பிதாவும் தம்மை நம்பினவர்கள் பேரிலே அதிகச் சந்தோஷங்கொள்வாரல்லவா? என்றாலும், விசுவாசப் பரீக்ஷையும் மனதிற்குக் கஷ்டமாகத்தானிருக்கும். அதைச் சகித்துக்கொள்ள வேண்டியது தான். மற்றப்படி நஷ்டங்கள் உண்டாவது மன்னில், இருக்கிற விசுவாசமும் ஒழிந்து போகும். சோதனையில் நிலைநின்றால் விசுவாசம் பலப்படும். ஆபிரகாம் சோதிக்கப்பட்ட பின்பே விசுவாசிகளுக்குத் தகப்பனானுன் என்று பார்க்கிறோம். ஆத

லால் தன் ஒரே புத்திரன் தன்னைக் காப்பாற்றுவா னென்றும், தன் ஆஸ்தி தன்னைக் காத்துக்கொள்ளும் என்றும் எண்ணிக்கொள்பவர் தேவனைவிட்டு வழிதவ றிப்போனவர்களேயாவார். அவர்களுக்குத் துன்பமும் நோயும் சஞ்சலமும் தவிப்பும் சோதனையாக வருங் காலத்திலேதான், அவர்கள் சரியான வழிக்குவரப் பார்ப்பார்கள். என்றாலும் தவறிப் போகிறவர்கள் அநேகர் உண்டு என்று காணலாம். எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேல் புத்திரரில் மிகுதியான பேர் வனாந்தரத்திலே பல முறையும் முறுமுறுத்து அவிசு வாசம் காட்டவே, அவர்கள் பலமுறையும் தண்டனை களையடைந்து செத்தார்கள் என்று வாசிக்கின்றோம்.

மேலும், சரியான தெய்வ வணக்கங்களும் ஜெபங் களும் விசுவாசத்தால் பிறந்தவைகளே. ஆதலால் விசு வாசமில்லாத தெய்வ வணக்கங்களும் ஜெபங்களும் பாவங்களாகும். ஏனெனில் "விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே" (ரோ. 14: 23) என்று சொல்லப்பட்டி ருக்கின்றது. தெய்வ வணக்கத்திலே சோதனைகள் பல உண்டு. அதிலே சோதனை இல்லாவிட்டால், அதின் அருமை எப்படித் தெரியவரும்? தரியு ராஜாவின் காலத்திலே தானியேலின் விரோதிகள் ராஜாவை நோக்கி: "எவனாகிலும் முப்பது நாள் வரையில் ராஜா வாகிய உம்மைத்தவிர எந்த தேவனையானாலும் மனுஷனையானாலும் நோக்கி, யாதொரு காரியத்தைக் குறித்து விண்ணப்பம் பண்ணினால், அவன் சிங்கங் களின் கெபியிலே போடப்பட, ராஜா கட்டளை பிறப்

பித்து, உறுதியான தாக்கீது செய்ய வேண்டுமென்று" கேட்டு தந்திரமாய் தேச சட்டமாக ஏற்படுத்திவிட்டனர். " தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளே போய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்த படியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்கால் படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினன்" (தானி. 6 : 10). அதினாலே தானியேல் சிங்கங்களின் கெபியிலே போடப்பட்டாலும், அவன் விசுவாசத்தினாலே சேதமற்றிருந்தான் என்று பார்க்கிறோம். தேவன் தானியேலைக் காப்பாற்றும்படி வர ஒரு நிமிஷங்கூட பிந்தவில்லை என்று அறிகிறோம். மேலும் ஜெபங்களுக்குப் பல இடையூறுகள் சம்பவிக்கும். என்ன நேரிட்டாலும், ஜெபத்தில் விசுவாசத்தை தளரவிடலாகாது. அநேகர் ஜெபத்திற்கு உத்தரவு வரத் தாமதமானால் அவர்கள் அவிசுவாசங்கொண்டு, பின் வாங்கிப்போய், ஜெபத்தையும் விட்டுவிடுவார்கள்.

குறிப்பு :—உத்தரவு என்பது பதில். அநேகர் தாங்கள் கேட்டுக்கொண்ட காரியம் கைகூடிவந்தால் மட்டும் பதில் என்று நினைத்து, மற்ற விதமான உத்தரவுகளைக் கவனிக்கிறதே கிடையாது. அதினாலே பெரிய நஷ்டஙகள் உண்டாகும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. தாங்கள் செய்யவேண்டிய காரியங்களை அறியாமற்போவார்கள். அதினால் தேவ சம்பந்தமும்

அற்றுப்போக நேரிடும். இதைவிட பெரிய நஷ்டம் என்ன ?

மேலும், கிறிஸ்துவை அறிக்கையிடுவதில் சோதனைகள் வரும். அந்தக் காலத்தில் சிலுவையின் மரணம் நிந்தையாக எண்ணப்பட்டது. ஏனெனில், சிலுவையானது குற்றவாளிகளுக்கு உரியதாயிருந்தது. நமது குற்றங்களை தமது மேல் ஏற்றுக்கொண்டவர், சிலுவையின் நிந்தையையும் சுமந்தார். அந்த நிந்தையைக் குறித்து வெட்கமடைந்து அல்லது அதனால் வருந் துன்பத்திற்கு பயந்து, அவருடைய நாமத்தை அறிக்கையிட எவராவது பின் வாங்கினால், அந்தப் பிராயச்சித்தத்தில் எப்படி பங்கு கிடைக்கும்? "என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக்குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ அவனைக்குறித்து மனுஷ குமாரனும் தம்முடைய மகிமையோடும் பிதாவின் மகிமையோடும் பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார்" (பரி. லூக். 9 : 26) என்று சொல்லப்பட்டிருக்கிறது. எல்லாம் க்ஷேமமாயிருந்தால் மனுஷர் அவரை அறிக்கை செய்வார் போலும். இது மனுஷ சிந்தை. ஆனால் "தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான். என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்

பான்?" (பரி. மத். 16 : 25-26). ஆனபடியினாலே, இயேசுவை கிறிஸ்து என்று அறிக்கையிட தேவ ஆவி வேண்டியது (1 கொரி. 12 ; 3). மற்றப்படி சிறிய அறிக்கையானாலும் பெரிய அறிக்கையானாலும் செய்கிறதற்கு இயலாது; சோதனைக்கும் நிற்காது. முதலில் பிசாசினால் சோதிக்கப்பட்டு மறுதலித்த பரி. பேதுரு பரிசுத்தாவியை அடைந்தபின் தைரியமாய் சாட்சி பகர்ந்து, கடைசியில் தமது ரத்தத்தினாலே அதை முத்தரித்தார் என்று காண்கிறோம். இதெல்லாம் பரிசுத்தாவியின் வல்லமையால் நடக்கும். அதைப் பெற்றவர்களுக்கே அது தெரியும்; மற்றவர்களுக்கு அது பைத்தியமாகத் தோன்றும். தங்களுடைய உயிரைக் கொடுப்பதற்கும் அவர்கள் பாத்திரராக எண்ணப்படுவதே, அவர்களுக்குக் கிடைத்த பெரிய சந்தோஷமாயிருந்தது. இது என்ன ஆச்சரியம்! இது மனுஷ சிந்தைக்கு விளங்கவே விளங்காது.

இன்னும் ஒரு சோதனை உண்டு. அது பிசாசினுடைய மகா தந்திரமான சோதனை. தேவனுடைய மனுஷர் தேவவேலையைச் செய்யாதபடி தடை செய்வது தன்னால் முடியவில்லை என்று பிசாசு கண்டறிந்தவுடனே, அவன் அவ்வேலைகளைத் தகாத முறைகளைக் கொண்டு செய்ய ஆலோசனை சொல்லுவான் ; அதற்கு போலி நியாயங்களையும் எடுத்துக் காட்டுவான். அவனுடைய தந்திரமான ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளவே கூடாது. சிலபேர் எப்படியாகிலும் தேவவேலை நடக்க வேண்டியது ஒன்றுதானே என்று நினைப்பார்

கள். அது பெரிய தப்பிதம். சரியான வேலையை சரியான முறைப்படிதான் செய்யவேண்டும். மேலும், "உன் சுய புத்தியின்மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்" (நீதி. 3 : 5) என்றும், "மெய் ஞானத்தையும் நல்லாலோசனையையும் காத்துக் கொள்.........அப்பொழுது நீ பயமின்றி உன் வழியில் நடப்பாய், உன் கால் இடறாது" (நீதி. 3 : 21-23) என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. தேவன் ஒருவரே சகல நல்லாலோசனைகளுக்கும் சகல ஞானத்திற்கும் காரணராயிருக்கிறார். ஆதலால் பிசாசானவனுடைய சோதனைகளை விழிப்புடன் ஜெயிக்க வேண்டும். இயேசுநாதர் சோதனைகளை ஜெயித்த விதம் நமக்கு சிறந்த முன்மாதிரியாயிருக்கின்றது. சோதனையில் நாம் தவறுவோமானால் அது துக்கத்தையும் சஞ்சலத்தையும் உண்டாக்கும். அல்லாமலும் நஷ்டத்தையும் தண்டனையையும் கொண்டுவரும். மோசே தண்ணீருக்காகக் கன்மலையைப் பார்த்துப் பேசவேண்டியதற்குப் பதிலாக, கன்மலையைத் தன் கோலினால் அடித்தான். அதனாலே அவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்கக் கூடாமற் போனான் (எண். 20 : 8-12).

பாவத்திற்கு அடிமையாயிருப்பவர்களுக்கு சோதனை இல்லை. சாத்தானுக்கு அவர்களைப்பற்றிக் காரியமில்லை. பரிசுத்தமாய் நடக்கும்படியாகப் போராடுகிறவர்களுக்கே எல்லாச் சோதனைகளும் வரும். நாம்

ரட்சகருடையவர்கள் என்பதற்கு அது நமக்கு நல்ல அத்தாட்சி. மேலும், ஒரு கட்டடம் கட்டப்படும் பொழுது அதற்குக் கோளாறு குற்றம் சொல்லுபவர்கள் இருப்பது எவ்வளவு பிரயோஜனமாய் இருக்குமென்பது நமக்குத் தெரிந்த விஷயம். பின்னும் எதிராளியில்லாவிட்டால் ஜெயம் என்கிற பேச்சும் இல்லை. இதெல்லாம் இந்தப் பாவ உலகத்திற்கு வேண்டியதே. இயேசு சுவாமி இந்த உலகத்தின் சோதனைகளை யெல்லாம் ஜெயித்தது மட்டுமல்ல, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு எந்தக் காலமும் ஒத்தாசை செய்கிறவருமாயிருக்கிறார் என்று நமது அன்றாடக ஜீவியத்தில் நாம் கண்டறிந்து கொள்ளலாம். ஆனால் "முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான்." (பரி.மத். 24 : 13).

சோதனையில் சோராமல்
நாதனையே நாடிடுமின்.
துன்பத்தின் சூட்சமதை
இப்போ அறியாய் இனிமேல் அறிவாய்.

---

11. அதிகாரம்.

மிகுந்த கனி—நோயின் வேறொரு காரணம்.

"கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார்" (பரி. யோ. 15 : 2). தகுந்த காலத்தில் தோட்டக்காரன் திராட்சச் செடிகளிலே நெருங்கிய கிளைகள், தழைகள் முதலானவைகளை நறுக்கிப் போடுவான். அப்போதான் அந்தச் செடிகள் மிகுந்த கனிகளைக் கொடுக்கும். மற்றப் பிரயத்தனங்களினாலே மிகுந்த கனிகளை கொடுக்கவே மாட்டாது. செடிகள் கத்தரிக்கப்படும்பொழுது தெரியாதவர்கள் பார்த்தால், செடிகள் கெட்டுப்போய்விடும் என்று நினைக்கலாம். ஆனால் செடிகள் கெட்டுப் போவதில்லை என்பது திட்டமாக அறியப்பட்ட விஷயம். மெய்க் கிறிஸ்தவர்கள் யாவரும் பாவ அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டவர்கள். அவர்கள் அதிகக் கனிகளைக் கொடுப்பது மிகவும் விரும்பப்படத்தக்க விஷயமே. (பரி. யோ. 15 : 8). மெய் பக்தனில் இவைகள் உருவாக வியாதிகளும் துன்பங்களும் உண்டாகும். அந்தத்துன்பங்களினாலே அவர்கள் கெட்டுப்போய்விடமாட்டார்களென்பது நிச்சயம். அவைகள் நன்மையாகவே முடியும்.

"ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம்,

சாந்தம், இச்சையடக்கம்'' முதலானவைகள். (கலா. 5 : 22).

இதில் விவரிக்கப்பட்டிருக்கும் நற்குணங்களில் ஏதேனும் ஒன்றைத் தள்ளி விடலாமா? துன்பத்திற்கு பயந்தவர்கள் யாராவது இப்படி யோசிக்கலாம். ஒன்றையும் எந்தக் காலத்திலும் தள்ளிவிடல் ஆகாது. அவைகள் யாவும் ஒன்றுக்கொன்று சம்மந்தப்பட்டவைகளும் ஒரே ஆவியினாலே உண்டானவைகளுமானவைகள் என்று காணலாம். மேலும் அவைகள் ஒவ்வொன்றும் தன்னிலே பூரண அலங்காரமுள்ளவைகளும் இன்றியமையாதவைகளுமாய் இருக்கின்றன.

அன்பு—(1) "தேவன் அன்பாகவே இருக்கிறார்." (1 யோ. 4 : 16).

(2) "அன்பில்லாதவன் தேவனை அறியான்." (1 யோ. 4 : 8).

சந்தோஷம்—(1) "பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷம்." (ரோ. 14 : 17).

(2) "உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப் போடமாட்டான்." (பரி. யோ. 16 : 22).

சமாதானம்—(1) "சமாதானத்தின் தேவன்." (ரோ. 15 : 33).

(2) "என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்." (பரி. யாக். 14 : 27).

நீடிய பொறுமை—(1) "கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையா யிருங்கள்." (பரி. யாக் 5 : 7).

(2) "நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு." (கொலோ. 3 : 12).

தயவு—(1) "தயவையும்.........தரித்துக்கொண்டு." (கொலோ. 3 : 12).

(2) "தயவுள்ளவனுக்கு நீர் தயவுள்ளவராகவும்............தோன்றுவீர்." (சங். 18 : 25).

நற்குணம்—(1) "ஆவியின் கனி சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும்." (எபே. 5 : 9).

(2) "நீங்கள் நற்குணத்தினால் நிறைந்தவர்களும்." (ரோ. 15 : 14).

விசுவாசம்—(1) "விசுவாசத்தினாலே தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே." (கலா. 3 : 25).

(2) "நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய்." (ரோ. 11 : 20).

சாந்தம்—(1) "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்." (பரி. மத். 5 : 5).

(2) "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்." (பரி. மத் 11 : 20).

இச்சையடக்கம்—(1) "உலகமும் அதன் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்." (1 யோ. 2 : 17).

(2) "துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்." (ரோ. 13 : 14).

ஆகவே, ஒவ்வொரு விதமான கனியும் ஒவ்வொரு விதமான இன்பத்தைத் தரக்கூடியது. ஆவியின் கனிகளைக் கஷ்டத்துடனேதான் சாம்பாதிக்க முடியும். இந்தக்கனிகளை நாம் பெற்றிருக்கிறோமா? பெறாவிட்டால், அதற்குக் காரணம் என்ன? நாம் கேட்கிறதில்லையா? அல்லது, தப்பாய் கேட்கிறோமா? பெற்றுக் கொண்டோமென்றால், அவைகளை உபயோகித்து வரு

கின்றோமா? மற்றப்படி நாம் கிறிஸ்தவர்கள்தான் என்று ரூபகாரப்படுத்த நம்மிடத்தில் வேறே என்ன உண்டு? ஒரு மரத்தை அதன் கனியினாலே அறிய லாம். (பரி. மத். 12 : 23). அதுபோல, "அவர்களு டைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்." அந் தப்படியே, "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்க மாயிருக்கின்றன; அவையாவன,—விபசாரம், வேசித் தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கி யங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க் கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள், முதலானவைகளே." (கலா. 5 : 20).

"நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால், என் பிதா மகிமைப்படுவார்." (பரி. யோ. 15 : 8). நாம் கடவுளை மகிமைப்படுத்துவதே நமது நோக்கமாயிருந் தால், ஆவியின் கனிகள் நமக்கு வெகு அருமையா யிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

கனியற்ற மரங்கள் நிலத்தைத்தான் கெடுக்கும்,
கனியற்ற மாந்தரோ உலகத்தைக் கெடுப்பர்.
இணையற்ற யேசுவே என்னைக் கண்பார்த்திடும்,
துணையற்ற எனக்கோ நின் பதம் தஞ்சமே.

12. அதிகாரம்.

சிலுவை—நோயின் மற்றக் காரணம்.

நமது நேச மீட்பர் சிலுவையைத் தமக்காகவல்ல, நமக்காகவே சுமந்தார் என்று அறிவோம். "மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை" (பரி. மத். 27 : 42) என்று பகைவரும் சாக்ஷி பகர்ந்தனர். பகைவர் இதின் உள்ளான கருத்தை அறியாமல் சொல்லிவிட்ட போதிலும், இதில் உயர்ந்த சத்தியம் அடங்கியுள. இதை விட மஹா சிறப்பான ஊழியம் வேறே யாது? ஆகவே சிலுவையானது மகா மாட்சிமையுள்ளதாக சிறந்திலங்குகின்றது.

சிலுவைச் சொடி ஏற்றுங்கள்!
அதெங்கும் ஜோதி வீசுமே,
தெய்வீக அன்பைக் காணவும்
அச்சிலுவையால் வெல்வோமே. (*Hymn 259*).

"தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றுதவன் எனக்கு பாத்திரன் அல்ல" (பரி. மத். 10 : 38) என்று உலக ரட்சகர் விளம்பினர். "பின்பு அவர் எல்லாரையும் நோக்கி ஒருவன் என் பின்னே வர விரும்பினல் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (பரி. லூக். 9 : 23) என்ருர்.

இரட்சகர் தம்மிடத்தில் வந்த ஐசுவரியமுள்ள வாலிபனைப் பார்த்து "நீ போய் உனக்கு உண்டான

வைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு. பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின் பற்றி வா" என்றார். (பரி. மாற். 10 : 21).

நாம் பிறர் நிமித்தமாக சிலுவையை எடுத்துக் கொண்டு செல்வது பிரயோஜனமான ஊழியம். "அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது" என்று பரி. பவுல் சொல்லுகின்றார். (பிலி. 2 : 4). ஒரு சிறு பிள்ளை வியாதியினால் கஷ்டப்படும்பொழுது குணப்படாத பெற்றோர், தங்கள் பிள்ளையினிமித்தமாகத் தங்கள் பாவத்தைவிட்டு மனந்திரும்பினால், அந்த வியாதி வந்ததும் நல்லதுதானே. அந்தப் பிள்ளை தன் பாவத்தினிமித்தம் அல்ல, தன் பெற்றோருடைய பாவத்தினிமித்தம் சிலுவையை சுமந்தது என்று சொல்லலாமே. இப்படியே அநேகர் பிறருக்காக சிலுவையை சுமப்பார்கள் என்று அறியலாம்.

பிறருடைய வியாதிக்காக ஜெபிக்கிறவர்கள், தாங்கள் குணப்பட்டவர்களாக இருப்பது அவசியம். மற்றப்படி, பரிசுத்தரான கடவுளிடம் துணிந்து போக மாட்டார்கள். போனாலும், விசுவாசம் இருக்காது. தங்களிடத்தில் பாவம் குடிகொண்டிருப்பதாகக் கண்டறிந்தால், முதலாவது அதை நீக்கிவிட மனஸ்தாபத்துடன் ஜெபஞ்செய்து, பின்பு மற்றவர்களுக்காக தைரியமாய் கிருபாசனத்தண்டையில் சேரலாம்.

பாவத்தினாலே உலகம் ஒழுங்கீனமாய் நடக்கிறது என்று எண்ணிக்கொண்டு சும்மா இருந்துவிடல் கூடவேகூடாது. பாவஉலகத்தை மீட்ட ரட்சக ருடைய மீட்பின் வழிகள் தாறுமாறானவைகளுமல்ல, ஒழுங்கீனமானவைகளுமல்ல. ஒரு கடியாரம் கெட்டுப்போனால், அது சரிப்படுத்தப்படுமே. அப்படியானால் ஜீவியமானது பாவத்தினாலே கெட்டுப் போனால், அது திருத்தப்பட வேண்டியது எத்தனை அதிகம்!

பின்னும், நோயின் கடைசிக் காரணம் மரணம். எந்த விதமான மரணமானாலும் எல்லாரும் உலகத்தை விட்டுப் போகவேண்டியவர்களே. ஆனாலும் "நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல் லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்" (சங். 23 : 4) என்று சொல்லப்பட்டிருக் கின்றது. இரட்சகரின்மேல் விசுவாசமுள்ளவர்களுக்கு மரணத்தின் கூர் ஒடிந்துபோம் மரணம் ஜெயமாக விழுங்கப்படும். (1 கொரி. 15 : 54) "மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" (1 கொரி. 15 : 55).

வாழ்க சிலுவையே வாழ்க
பாரமற்ற பாரமே,
உன்னை முழு மனதார
தோள்மேல் ஏற்றிக்கொள்வோமே. (*Hymn 71*).

13. அதிகாரம்.

மருந்துப் பிரயோகம்.

வியாதியஸ்தர் தங்கள் வியாதிக்குத் தகுந்த சிகிச்சை அடைவதற்கு, தேவ ஒத்தாசை வேண்டுமென்பது சொல்லாமலே தெரிந்த விஷயம். "உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்." (நீதி. 16 : 3). பின்னும் ஆசா ராஜா "தன் வியாதியிலும் கர்த்தரை அல்ல, பரிகாரிகளையே தேடினன்," என்பது சுகவீனருக்கு ஒரு நல்ல எச்சரிப்பாக இருக்கின்றது. (1 நாளா. 16 : 12). ஆனால், சிலபேர் மருந்துகளைக் கொஞ்சமேனும் உபயோகித்தல் கூடாது என்று பிடிவாதமாய் சாதிப்பதற்குப் போந்த நியாயங்கள் கிடையாதென்று நாம் கண்டறியலாம். மருந்து சாப்பிடக் கூடாதென்பதும் வைத்தியரைத் தேடக்கூடாதென்பதும் பரிசுத்த வேதாகமத்தால் ரூபிக்கப்படக்கூடாத விஷயங்களே. மருந்துப் பிரயோகம் கூடாதென்று சாதிப்பவர்கள் ஒரு அந்தத்திலும், தேவ ஒத்தாசையைப்பற்றி கவனிப்பது அவசியமில்லை என்று சாதிப்பவர்கள் மறு அந்தத்திலும் தவறி விழுகின்றவர்களாயிருக்கிறார்கள். தேவ ஒத்தாசையைத் தேடுவதும், மருந்துப் பிரயோகங்களைச் செய்துகொள்வதும் ஒன்றுக்கொன்று எதிரிடையான விஷயங்களேயல்ல. அவைகள் இரண்டு எஜமான்களும் அல்ல.

பின்னும், மருந்துப் பிரயோகங்களைப்பற்றி நாம் கவனிக்கக்கூடிய சில குறிப்புகளுண்டு. "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதே யல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை" (பரி. லூக். 5 : 31) என்று ரட்சகர் சொன்னார். பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதில்லையா? நியாயதோரணை எதிலே அடங்கியிருக்கிறது? பரி. பவுல் தன் பிரயாணங்களிலே தனக்கு உதவியாகத் தெரிந்துகொண்ட வைத்தியனாகிய பரி. லூக்காவின் திருநாளுக்குரிய மாலைஜெப முதலாம் பாடமானது, தள்ளுபடி ஆகமத்திலிருந்து எடுக்கப்பட்டபோதிலும், அதை இவ்விடத்தில் எடுத்துரைப்பது யாவருக்கும் ஏற்றதாயிருக்கும் என்று நினைக்கிறேன்.

சீராக்கு. 38: 1—14.

"நீ உபத்திரவப்படுகிற வேளையில் வைத்தியன் உனக்கு வேண்டியவனாயிருக்கையில், அவனுக்கு வேண்டிய மரியாதையையும் சங்கையையுஞ் செய்யப்பார். ஏனென்றால் கர்த்தர் அவனைச் சிருஷ்டித்து அவன் கொடுக்கும் அவிழ்தத்தையும் கட்டளையிட்டார். இராசாக்களும் அவனுக்கு வெகுமானத்தைச் செய்கிறார்கள். வைத்தியன் கற்ற அறிவு அவனைத் தானே மேன்மைப்படுத்தும். அவன் பிரபுக்களாலும் ஆண்டவமார்களாலும் சங்கையைப் பெறுவான். கர்த்தர் மருந்துகளைப் பூமியிலே முளைக்கப்பண்ணுகிறார். புத்திமான்களான யாவரும் அதுகளை அசட்டைபண்ணார்கள். பூர்வ காலத்திலே முதலாய் மரத்

தின் பெலன் ஏதென்கிறதை அறியும்படிக்கு அதி ஞலே கசப்பான தண்ணீர் தித்திப்பாக்கப்பட்டது. அவர் தம்முடைய செய்கிரியைகளால் மகிமைப்படுத் தப்படும்படிக்கு இப்பேர்ப்பட்ட அறிவையே மனு ஷருக்குக் கட்டளையிட்டார். அதின் வழியாக அவர் கள் அவரவரைக் குணமாக்கி வியாதியைத் தீர்த்துப் போடுகிருர்கள். தைலக்காரனும் அதுகளைக்கொண்டு தைலமிறக்குவான். தொகையாகக் கர்த்தருடைய கிரியைகள் எண்ணிக்கைக்குள் அடங்காததுகள்; பூமியிலே நலமாயிருக்கிறதெல்லாத்தையும் அவரே கட்டளையிடுகிருர்.

என் குமாரனே, நீ வியாதிப்படும் வேளையிலே இதெல்லாத்தையும் அற்பமாய் எண்ணுதே; கர்த் தாவையுங்கூட நீ வேண்டிக்கொள்; அப்போ அவர் உன்னைச் சொஸ்தமாக்குவார். நீ பாவத்தைவிட்டு உன் கைகளைச் செவ்வைபண்ணி, உன்னிருதயத்தை எல்லா அக்கிரமங்களுக்குஞ் சுத்தி கரித்துக்கொண் டிரு. நீ எல்லாத்தையும் விட்டுப் புறப்படவேண்டிய வனைப்போல பிரியமான வாசனையையும் நினைவுகூரு கிற மெல்லிய மாவையும் கொழுப்புள்ள பலியையும் செலுத்துவாயாக. பிற்பாடும் நீ வைத்தியனை ஏற்றுக்கொண்டு அவன் உனக்கு வேண்டியவனுயிருக் குமட்டும் அவனை விட்டுவிடாதே, ஏனென்ருல் கர்த்தர் அவனை உண்டாக்கினுர். ஒரு வைத்தியனே வியாதிக் காரனின் ஜீவனைக் காக்கிறதுக் கிடமான அந்தந்த வேளை வரும். கர்த்தரும் வியாதிக்காரனைச் சொஸ்

தமாக்கி ஆரோக்கியத்தையும் நீடித்த ஆயுசையும் கட்டளையிடவேணுமென்று வைத்தியன் அத்தோடே கூட அவரை வேண்டிக்கொள்வதே அவசரம்."

கடைசியாக, வியாதி நீங்கி சுகமடைந்தவர்கள் தேவனுக்கு நன்றி செலுத்தி ஊழியஞ்செய்ய மறவாதிருப்பார்களாக. "உபத்திரவப்படுகிறவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்" (சங். 22 : 24) என்றும், "உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதிப்பேன்" (சங். 22 : 22) என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

"கர்த்தர் ராஜரிகம் பண்ணுகிறார்; பூமி பூரிப்பாகி திரளான தீவுகள் மகிழக்கடவது."

(சங். 9 : 71).

ஏசு மேசையா உம் பாதம்
பணிவதே மாக்ஷி!
தேசா தேசமெல்லாம் வணங்கிடும்
பக்தரே சாக்ஷி.

14. அதிகாரம்.

SECRET OF STRENGTH.

If your heart be pure by the power of the Holy Spirit, your strength will be more than the strength of seven.

பலத்தின் ரகசியம்.

உங்கள் இருதயம் பரிசுத்த ஆவியின் வல்லமையால் சுத்தமாயிருந்தால், உங்கள் பலம் ஏழுபேரின் பலத்தைவிட அதிகமாயிருக்கும்.

J. A. A.

முற்றிற்று.

Copies of this book can be had from the Author,

Rev. J. A. AMIRTHANAYAGAM,

NANGUR,

[*Via*] **Tiruvengadu,**

TANJORE DISTRICT.

Price 5 Annas.

A discount of 25% will be allowed for those who will buy 20 copies or more at a time.

J. A. Amirthanayagam.

Priest, S. P. G.

Solden & Co., Madras, S. E.